தமிழ்நாடு • மகளிர் மேம்பாட்டு •

முற்றம்

₹10/- மலர் 15 இதழ் 6 அக்டோபர் 2013 | மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ் | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

திருமதி மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

சுய உதவிக் குழுக்களின் மகளிர் எதையும் சாதிக்கும் வன்மை பெற்றவர்கள் என்பது அனைவரும் அறிந்த ஒன்றுதான். அதை மீண்டும் மெய்ப்பிக்கும் வகையில் சென்னை, அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்ற மகளிர் மேளா 2013 நவராத்திரி விற்பனைக் கண்காட்சியில் அரங்குகள் அமைத்திருந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் தங்கள் உற்பத்திப் பொருட்களை ரூ. 58 இலட்சத்திற்கும் மேல் விற்பனை செய்து சாதனை படைத்துள்ளனர். இது சுய உதவிக் குழு மகளிருக்கு மட்டும் கிடைத்த வெற்றியல்ல, பெண்கள் அனைவருக்கும் கிடைத்த வெற்றியாக கருத வேண்டும். இந்த வெற்றியை பெற பாடுபட்ட அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மகளிர் பொருளாதார வளர்ச்சி பெற்று, சுயசார்புடன் தத்தமது சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்ற நோக்கத்துடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொலைநோக்குப் பார்வையுடன், தீட்டும் திட்டங்கள் இன்றைக்கு சுய உதவிக் குழு மகளிரின் வாழ்வில் வறுமை எனும் இருளை நீக்கி வளம் எனும் ஒளியை பரவச் செய்துள்ளது. இந்நிலையை உருவாக்கித் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு சுய உதவிக் குழு இயக்கம் என்ற குடும்பத்தில் இணைந்துள்ள அனைவரும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வோம்.

தடைகள் பல வந்தாலும் அதைத் தகர்த்து, சாதனை படைக்கும் திறன் சுய உதவிக் குழு மகளிருக்கு உள்ளது என்பதை அவர்கள் பல்வேறு தருணங்களில் வெளிப்படுத்தி வருகின்றனர். அவர்களின் ஊக்கத்திற்கு மேலும் உத்வேகம் அளிக்கும் வகையில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமும் புதுவாழ்வு திட்டமும் என்றும் துணை நிற்கும். வெளி உலகே தெரியாத நிலையில் வாழ்ந்து வருபவர்கள், சமையல் அறையே தங்களின் வாழ்க்கை என நிலைநிறுத்திக் கொண்டவர்கள், அன்றாடத் தேவைகளுக்குக் கூட பிறரை சார்ந்து இருப்பவர்கள் என பெண்களை எள்ளி நகையாடி சிறுமைப்படுத்தி வந்தவர்களுக்கு இடையே நாங்களும் சாதிக்கப் பிறந்தவர்கள்தான் என்று தலைநிமிர்ந்து நிற்பவர்கள்தான் சுய உதவிக் குழு இயக்கத்தின் மகளிர்.

அந்த இயக்கத்தைச் சேர்ந்த உங்களின் ஊக்குமும், வேகமும், செயல்பாடும் என்றும், எங்கும் சுணங்கி நிற்கக் கூடாது. பொருளாதார வளர்ச்சி மட்டுமே குறிக்கோளாகக் கருதி, நீங்கள் செயல்படவில்லை என்பதை உங்களின் செயல்பாடுகள் மூலம் அனைவரும் அறிவர். குழந்தை திருமணம், பெண் சிசுக்கொலை, பெண்களுக்கு எதிரான வன்முறை, பாலின பாகுபாடு போன்ற தீமைகளை தடுக்கவும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நோயற்ற வாழ்வு, பிளாஸ்டிக் பயன்பாடு தவிர்ப்பு போன்ற சமுதாய நன்மைக்காகவும் பாடுபடவும் தயங்காதவர்கள் தான் சுய உதவிக் குழு மகளிர் என்பது எல்லோருக்கும் தெரியும்.

உங்களின் செயல்பாடுகள் மேலும் சிறப்பாக இருக்க வேண்டும், பலருக்கு வழிகாட்டியாக சுய உதவிக் குழு இயக்கம் திகழ வேண்டும், உங்களின் சாதனைகள் தொடர வேண்டும் என்பது எனது ஆசை. இதை நிறைவேற்றும் பொறுப்பு உங்களுக்கு உள்ளது என்பதைக் கூறிக் கொண்டு அனைவருக்கு தீப ஒளித் திருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலாண்மை இயக்குநர்

மகளிர் பொருளாதார வளர்ச்சி பெற்று, சுயசார்புடன் தத்தமது சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்ற நோக்கத்துடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொலைநோக்குப் பார்வையுடன், தீட்டும் திட்டங்கள் இன்றைக்கு சுய உதவிக் குழு மகளிரின் வாழ்வில் வறுமை எனும் இருளை நீக்கி வளம் எனும் ஒளியை பரவச் செய்துள்ளது. இந்நிலையை உருவாக்கித் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு சுய உதவிக் குழு இயக்கம் என்ற குடும்பத்தில் இணைந்துள்ள அனைவரும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வோம்.

கர்ப்பப்பைவாய் புற்றுநோய்

இணைந்து செயல்படுவோம்! வெற்றி பெறுவோம்!

- கர்ப்பப்பைவாய் புற்றுநோய் ஆரம்ப நிலையிலேயே கண்டறியப்பட்டால், அது 100% குணப்படுத்தக் கூடியது.
- இந்நோயினால் ஏற்படும் பெரும்பாலான உயிரிழப்புகளுக்கு, பரிசோதனை செய்து கொள்ளாமையே காரணம்.
- எனவே நீங்கள் **30** வயதும், அதற்கு மேற்பட்ட பெண்மணியானால் இன்றே, கர்ப்பப்பைவாய் பரிசோதனையை செய்து கொள்ளுங்கள்.

வயது 30+

இலவச பரிசோதனைக்கு உங்கள் அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது அரசு மருத்துவமனையை அணுகவும்.

தமிழ்நாடு சுகாதாரத் திட்டம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●
முற்றம்
மலர் 15 இதழ் 06 அக்டோபர் 2013
விலை ரூ. 10/-

கௌரவ ஆசிரியர்
மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
டபிள்யு. சிராஜுன்னிசா
பொது மேலாளர்

ஆசிரியர் குழு
கோ. ராதா
கூடுதல் இயக்குநர்

ம. மனோகர சிங்
கூடுதல் இயக்குநர்

எம். மாதவி
கூடுதல் இயக்குநர்

புது வாழ்வு திட்டம்
ஆர். வி. ஷஜீவனா
கூடுதல் திட்ட இயக்குநர்
மோ. கணேஷ்குமார்
தகவல் தொடர்பு வல்லுநர்

பொறுப்பாசிரியர்
மு. மேகவர்ணம்
மக்கள் தொடர்பு அலுவலர்

அனுப்புகை உதவியாளர் - முற்றம்
ஏ. கண்ணன்

கணக்கர்
சு. சசிகலா

கணினி வடிவமைப்பு
மு. செல்வம்

பிழை திருத்துபவர்
எஸ். எஸ். ரவிச்சந்திரன்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.

தொலைபேசி: 044-2817 3412 / 3413
தொலைநகல்: 044-2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது

ஆசிரியரிடமிருந்து...

முன்னெச்சரிக்கை....

அன்புள்ள வாசகர்களுக்கு,

சில நாட்களுக்கு முன்பு, 'பைலின் புயல்' ஒடிசா மற்றும் ஆந்திரா மாநிலங்களை தாக்கி பெரும் சேதத்தை ஏற்படுத்தியது. இப்புயலில் இலட்சக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்தனர். பல ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களும், பயிர்களும் நாசமடைந்தன. மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டு அவைகளை சரி செய்ய பல மாதங்கள் கூட ஆகலாம் என செய்திகள் கூறுகின்றன. அதே வேளையில் அரசு தீவிரமாக எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் உயிர் சேதம் மிகமிக குறைவாகவே இருந்தது என்பது பாராட்டுக்குரியதாகும்.

இதேபோன்று சில நாட்களுக்கு முன்பு பிலிப்பைன்ஸ் நாட்டில் நிலநடுக்கம் ஏற்பட்டு, மத்திய தீவு முழுவதும் பாதிக்கப்பட்டு உயிர்களும், உடைமைகளும், கட்டிடங்களும் பெருமளவில் சேதமடைந்துள்ளதை செய்திகளில் பார்த்தோம். இவ்வாறு இயற்கை சீற்றங்களான புயல், வெள்ளம், நிலநடுக்கம் ஆகியவைகள் அடிக்கடி உலகை அச்சுறுத்தி வருகின்றன. குறிப்பாக ஜப்பான், சீனா, இந்தியா, பிலிப்பைன்ஸ் போன்ற ஆசிய நாடுகள் இயற்கை சீற்றங்களால் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகின்றன. இந்த இயற்கை சீற்றங்கள் பேரழிவை ஏற்படுத்துவதால் நாட்டின் பொருளாதாரம் பெரிய அளவில் பாதிக்கப்படுகிறது. அதோடு ஒவ்வொரு பேரிடருக்கு பின்பும் நிவாரண பணிகள் செய்வதற்கு பல கோடி ரூபாய்கள் தேவைப்படுகிறது. இதனால் நாட்டின் வளர்ச்சியில் பின்னடைவு ஏற்படுகிறது, விலைவாசிகள் உயர்கின்றன.

இயற்கையைக் கட்டுப்படுத்த முடியாதுதான். ஆனால் அவைகளால் ஏற்படும் சிரமங்களை குறைத்துக் கொள்வதற்கான வழிமுறைகள் இன்று பல நாடுகளில் தீவிரமாகக் கண்டு ஆராயப்பட்டு வருகிறது. சுற்றுப்புறச் சூழலைக் காப்பதற்கான கல்வியறிவு மக்களிடையே அதிகம் தேவைப்படுகிறது. தேவைக்கு அதிகமாக இயற்கை அழிக்கப்படுவதை தடுப்பதற்கு கடுமையான சட்டங்கள் தேவைப்படுகிறது. நமது ஒவ்வொரு செயலிலும், அரசு நடைமுறைப்படுத்தும் திட்டங்களிலும், இயற்கை சீற்றங்களால் உருவாகும் சிரமங்களையும், பாதிப்புகளையும் குறைக்கின்ற அம்சங்களை இணைத்துக் கொள்வது பாதுகாப்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகும்.

அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் கனமழை, புயல், வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்களால் தமிழ்நாட்டிற்கு பாதிப்புகள் ஏற்படலாம். ஒருவேளை பருவமழை தவறினால் வருகின்ற கோடை காலத்தில் அளவிற்கு அதிகமான வெப்பமும், வறட்சியும் ஏற்பட்டு அதனால் பாதிப்புகளும் வரலாம்.

எனவே, மகளிர் குழு உறுப்பினர்கள், பேரிடர் காலங்களில் உயிர்கள் மற்றும் உடைமைகளைப் பாதுகாப்பதற்கும், உணவு மற்றும் உடை தடையின்றி கிடைப்பதற்கும், வலுவான கட்டமைப்புகளை உருவாக்குவதற்கும், வாழ்வாதாரங்களான நிலம், சிறு தொழில்கள், கால்நடைகள் ஆகியவற்றை பாதுகாப்பதற்கும் என்ன செய்யலாம் என ஆலோசித்து, முன்னெச்சரிக்கையுடன் நமக்கு ஏற்படும் சிரமங்களை குறைத்துக் கொள்ளத் திட்டமிட வேண்டும்.

இப்படிக்கு

(எஸ். சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்

கிராமப்புற மக்களின் வாழ்க்கையில் வறுமையை நீக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயல்பட்டு வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகளை மாதந்தோறும் வெளியிட்டு வரும் முற்றம் சுய உதவிக் குழு மகளிருக்கு மிகச் சிறந்த வழிகாட்டியாக இருக்கிறது என்பதை எங்கள் குழுக்கூட்டத்திலேயே அறிவித்துள்ளோம். முற்றத்திற்கு வாழ்த்துகள்.

உறுப்பினர்கள்
நேரு மகளிர் சுய உதவிக் குழு,
திருவையாறு, தஞ்சை மாவட்டம்.

பொது அறிவை வளர்க்கும் செய்திகள், மருத்துவக் குறிப்புகள், வரலாற்று நிகழ்ச்சிகள், அழகைப் பராமரிக்கும் செய்திகளை மட்டுமின்றி மகளிர் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகளையும், அவைகளின் செயல்பாடுகளையும் தாங்கி வரும் முற்றம் இதழ், எங்களுக்கு பயனுள்ளதாக இருப்பதால் அதை நாங்கள் பாதுகாத்து வைத்திருக்கிறோம்.

உறுப்பினர்கள்
சாமந்திப்பூ மகளிர் மன்றம்,
திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்.

கிராமப்புற ஏழைப் பெண்களுக்கு விழிப்புணர்ச்சி ஊட்டி, அவர்களை குழுவாக இணைத்து பல்வேறு தொழில்களிலும் பயிற்சி கொடுத்து, அவர்களை இன்று தொழில் முனைவோர்களாக மாற்றி உள்ள புதுவாழ்வு திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்பு சங்கம் ஆகியவற்றின் செயல்பாடுகளையும், மகமையின் செயல்பாடுகளையும் வண்ணப் படங்களுடன் மாதந்தோறும் சிறப்புடன் வெளியிட்டு வரும் முற்றம் இதழ் மேலும் சிறப்புடன் வளர்ச்சி பெற எங்கள் குழுவின் சார்பில் வாழ்த்துகிறோம்.

உறுப்பினர்கள்,
அம்பிகை மகளிர் சுய உதவிக் குழு,
பள்ளிப்பட்டி, சேலம் மாவட்டம்.

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், தங்கள் பகுதியில் நடைபெறும் சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவற்றை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும் ஆலோசனைகளும் வரவேற்கப்படுகிறது.

இப்படிக்கு

உள்ளே...

நவம்பர் 14 ஜவகர்லால் நேரு பிறந்த தினம் பக்கம்...5

இந்திய சினிமா நூற்றாண்டு விழா கொண்டாட்டம் பக்கம்...8

அழகைப் பராமரிக்கும் இயற்கைப் பொருட்கள் பக்கம்...15

காப்பீடு இன்றைய அவசியத் தேவை பக்கம்...18

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு கணினிகள் பக்கம்...23

ஆரோக்கியமான வாழ்க்கைக்கு... பக்கம்...30

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnaduwomen.net/mutram

இக்கூட்டமைப்பின் உறுப்பினர் சுய உதவிக் குழுக்கள் மிகவும் ஆர்வத்துடன் செயல்பட்டு வருகின்றனர்.

முள்ளிக்கரும்பூர்

கூட்டமைப்பின் வெற்றிக் கதை

திருச்சி மாவட்டம், அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியம், முள்ளிக்கரும்பூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, தனது உறுப்பினர் குழுக்கள் பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், வாழ்வாதாரத்தினை பெருக்கிக் கொள்ளவும் பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது.

இக்கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ள சங்கமம் சுய உதவிக் குழு ரூபாய் இரண்டு இலட்சம் கடனுதவி பெற்று முல்லை நகர் பகுதியிலும், கிராம ரோஜா சுய உதவிக் குழு ரூபாய் இரண்டு இலட்சம் கடனாகப் பெற்று முள்ளிக் கரும்பூர் பகுதியிலும் வாழை சாகுபடி செய்து வருகின்றனர். மேலும் அபிநயா சுய உதவிக் குழுவினர் ரூபாய் 1,35,000/– கடனுதவி பெற்று வாழை நார் பொருட்கள் தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். மேற்படி குழுவினர் பல்வேறு இடங்களுக்கு வாழை மரம், வாழைப் பழங்கள், இலை, வாழை நார் போன்ற பொருட்களை விற்பனை செய்து வருவாய் பெற்று வாழ்வாதாரத்தைப் பெருக்கி வருகின்றனர்.

தமயந்தி, வெள்ளந்தாங்கி அம்மன், தமிழ் சுடர் மற்றும் மணிப்புறா ஆகிய மகளிர் சுய உதவிக் குழுக்கள் கூட்டமைப்பில் கடனுதவி பெற்று முள்ளிக் கரும்பூர் பகுதியில் கறவை மாடுகள் வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டு, பால் மற்றும் பால் உப பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர். இதன் மூலம் இக்குழுக்களின் உறுப்பினர்கள் மாதந்தோறும் நிலையான வருவாய் பெற்று தங்களின் பொருளாதாரத்தை உயர்த்தி வருகின்றனர்.

மேலும் சத்தியம், கானக்குயில் ஆகிய குழுக்கள் கூட்டமைப்பில் இருந்து தலா ரூ. 3.00 இலட்சம் வீதம் கடனுதவி பெற்று, முல்லை நகர் பகுதியில் கீரை பயிரிடும் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். கீரைகளை பறித்து உள்ளூர் சந்தைகளில் விற்பனை செய்து மாதந்தோறும் கணிசமான வருவாய் பெறுகின்றனர்.

இதுதவிர இக்கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ள மேலும் 5 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் கடனுதவி பெற்று முள்ளிக் கரும்பூர் பகுதியில் ஆடு வளர்த்தல், மளிகைக் கடை, கீற்று முடைதல் மற்றும் காய்கறி வியாபாரம் செய்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்.

முள்ளிக் கரும்பூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் இணைந்துள்ள சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் ஒற்றுமையுடனும், உற்சாகத்துடனும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு மிகவும் சிறப்பான வளர்ச்சியைப் பெற்றுள்ளனர்.

வருவாய் பெறுவதை மட்டுமே நோக்கமாகக் கொள்ளாமல், தங்கள் பகுதியில் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்துவதற்கும், முதியோர், மாற்றுத்திறன் கொண்டோர் மற்றும் நலிவுற்றோரின் வளமாக வாழ்வாதாரத் திற்குத் தேவையான உதவிகளைப் பெற்றுத் தருவதற்கும், பெண் கல்வி வளர்ச்சி, சுற்றுப்புறச் சுகாதாரம், குழந்தை திருமணம் தடுப்பு போன்ற பல்வேறு சமூக நலச் செயல்களிலும், முள்ளிக் கரும்பூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பும், அதன் உறுப்பினர் சுய உதவிக் குழுக்களும் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபட்டு, தங்கள் பகுதியில் சிறப்புடன் செயல்பட்டு வருகின்றனர். ■

நவம்பர் 14

உலக நீரிழிவு நோய் தினம்

உடல் நலம் காத்திடுவோம்...

உலகை அச்சுறுத்தும் நோய்களுள் ஒன்றான நீரிழிவு நோய் (சர்க்கரை நோய்) குறித்த விழிப்புணர்வை அனைவரும் பெற வேண்டும் என்ற நோக்குடன், உலக நீரிழிவு நோய் தினத்தை ஆண்டுதோறும் நவம்பர் மாதம் 14ஆம் தேதி அனுசரிக்க வேண்டும் என 2006ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் தீர் மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி ஆண்டுதோறும் நவம்பர் மாதம் 14ஆம் தேதி உலக நீரிழிவு நோய் தினம் அனுசரிக்கப்படுகிறது.

சர்வதேச நீரிழிவு நோய் சம்மேளனத்தினாலும் உலக சுகாதார நிறுவனத்தினாலும் 1991 ஆம் ஆண்டு முதன்முறையாக நீரிழிவு தினம் அறிமுகப்படுத்தப்பட்டது.

நீரிழிவு நோய்க்குப் பயன்படுத்தும் இன்சுலின் மருந்தினை சார்ல் பெஸ்ம்ட் என்பவருடன் இணைந்து 1921ஆம் ஆண்டு பிரெட்ரிக் பான்ரிங் என்பவர் கண்டுபிடித்தார். இவரது பிறந்த தினத்தின் நினைவாகவே இன்றைய நாள் நினைவு கூரப்பட்டு வருகிறது.

சர்வதேச ரீதியில் ஏறத்தாழ 150 நாடுகளில் உள்ள மக்கள் ஒன்றிணைந்து இந்நோய் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர். சர்வதேச நீரிழிவு நோய் சம்மேளனத்தினாலும் உலக சுகாதார நிறுவனத்தினாலும் 1991ம் ஆண்டு முதன்முறையாக நீரிழிவு தினம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த தினத்தில் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. ■

நவம்பர் 14

ஜவகர்லால் நேரு பிறந்த தினம்

குழந்தைகள் தினம்...

உலகின் சிறப்பு வாய்ந்த தினங்களுள் மிகவும் முக்கியமானது குழந்தைகள் தினம். இந்த தினம் பல்வேறு நாடுகளில் பல்வேறு தினங்களில் கொண்டாடப்படுகிறது. குழந்தைகள் மீது அன்பு மழை பொழிந்த மறைந்த பிரதமர் பண்டித ஜவகர்லால் நேருவின் பிறந்த நாளான நவம்பர் 14 அன்று இந்தியாவில் குழந்தைகள் தினம் கொண்டாடப்படுகிறது. நாட்டின் எதிர்காலம் குழந்தைகள் கையில்தான் இருக்கிறது என்றும், குழந்தைகளிடம் ஆண் பெண் என்ற பேதம் பார்க்கக் கூடாது என்றும் நேரு அவர்கள் அடிக்கடி சொல்லுவார். குழந்தைகளுக்கு பாதுகாப்பான அன்பான சூழ்நிலை அமைய வேண்டும் என்று விரும்பினார்.

அவர் குழந்தைகளுக்கு எழுதிய கடிதத்தில், 'குழந்தைகளுடன் இருப்பதை நான் விரும்புகிறேன். அவர்களுடன் பேசவும், விளையாடவும் விரும்புகிறேன். அப்படி விளையாடும் போது, நான் வயதானவன் என்பதை மறந்து விடுகிறேன். குழந்தைப் பருவம் மாறி நீண்டகாலம் ஆகிவிட்டது என்பதையும் மறந்து விடுகிறேன். ஆனால் நான் எழுத உட்காரும் போது, என் வயதும், தூரமும் குழந்தைகளாகிய உங்களிடமிருந்து என்னை பிரித்து விடுகின்றன. வயதானவர்கள் இளையோருக்கு நல்ல அறிவுரைகளை வழங்கும் பழக்கத்தை கடைபிடிக்க வேண்டும்...' என்று எழுதியுள்ளார். ■

நேரு மிகச் சிறந்த பேச்சாளர், தி டிஸ்கவரி ஆப் இந்தியா மற்றும் ஆட்டோபயாகிராபி எனும் அவரது புத்தகங்கள் உலகப்புகழ் பெற்றவை.

இது நம் கலைகளின்

வரலாறு

பகுதி - 7

காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில் கி.பி. 700ஆம் ஆண்டுவாக்கில் இராஜசிம்மனால் கட்டத் தொடங்கப்பட்டதெனினும், இவரது புதல்வரான மூன்றாம் மகேந்திரவர்மனே கட்டிடப் பணிகளை நிறைவேற்றி வைத்ததாகத் தெரிகிறது.

கட்டிடக் கலை, இசைக்கலை மற்றும் ஓவியக் கலை ஆகியவற்றுக்கு பல்லவ மன்னர்கள் ஆற்றிய தொண்டு அளப்பறியது. பல்லவ மன்னர்களால் உருவாக்கப்பட்ட கலைப்படைப்புகள் நம் தமிழகத்தின் பல பகுதிகளிலும் விரவிக் கிடக்கின்றன. அந்த கலைப்படைப்புகள் காணப்படும் இடங்கள், அவைகள் குறித்த பல்வேறு செய்திகளும் இப்பகுதியில் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன. இந்த இதழில் காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலின் கலைப்படைப்புகள் குறித்து அறிந்து கொள்ளலாம்.

காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில்

பல்லவ நாட்டின் பண்டைய தலைநகராக விளங்கிய காஞ்சிபுரம் மிகச்சிறந்த கலைப்படைப்புகளை கொண்டது. இங்கே அமைந்துள்ள பல காலகட்டங்களையும் சேர்ந்த கோவில்களில் சிறப்பு வாய்ந்த ஒன்றுதான் கைலாசநாதர் கோவில். தென்திசைக் கைலாயம் என்று அழைக்கப்படுகின்ற இக்கோவில் திராவிடக் கட்டிடக் கலையின் ஆரம்ப கால கட்டத்துக்குரிய திருப்பு முனைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில் கி.பி. 700ஆம் ஆண்டுவாக்கில் இராஜசிம்மனால் கட்டத் தொடங்கப் பட்டதெனினும், இவரது புதல்வரான மூன்றாம் மகேந்திரவர்மனே கட்டிடப் பணிகளை நிறைவேற்றி வைத்ததாகத் தெரிகிறது. பின்னர் 14ஆம் நூற்றாண்டில் விஜயநகர காலத்தில் சில பகுதிகள் கட்டப்பட்டதுடன், திருத்த வேலைகளும் செய்யப்பட்டிருப்பதாக அறியக் கூடியதாக உள்ளது.

இக்கோவிலின் பழமையாலும், மிக நுண்ணிய வேலைபாடுகள் கொண்ட சிற்பங்களை பாதுகாக்கும் நோக்குடனும், இக்கோவிலை அரசின் தொல்லியல் துறையின் கீழ் கொண்டு வந்துள்ளனர். கோயிலின் சுற்றுச்சுவர் முழுவதும் கருங்கற்களால் ஆன சிற்பங்களும், கோவிலின் உள்ளே சுடுமண் சிற்பங்களும் காணப்படுகின்றன. இந்தச் சிற்பங்களைக் காணக் கண்கோடி வேண்டும்.

கட்டிடக் கலை மட்டுமின்றி ஓவியம், இசை போன்ற கலைகளும் பல்லவ மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் சிறப்பு பெற்று விளங்கியிருந்தன. அவைகள் குறித்த செய்திகளை அடுத்து வரும் இதழ்களில் அறிந்து கொள்ளலாம். ■

கட்டுமானக் கோவில்கள் கட்டும் தொழில் நுட்பம், தமிழ்நாட்டில் பல்லவ மன்னனான இராஜசிம்மனால் கட்டப்பட்ட மாமல்லபுரம் கடற்கரைக் கோவிலில் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து கட்டப்பட்டது தான் காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில்.

திராவிடக் கட்டிடக்கலை வளர்ச்சிக்கு உத்வேகம் கொடுத்தது பல்லவர்கள் ஆவர்.

தமிழர்களின் சிற்பக் கலைத்திறனை பறைசாற்றும் வண்ணம் தமிழகத்தில் அமைந்துள்ள கோவில்கள், அவற்றின் சிறப்புகள், நடைபெறும் விழாக்கள் போன்ற விபரங்கள் தொடர்ந்து முற்றம் இதழில் வெளியிடப்படும். சுய உதவிக் குழுவினர் இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ள இடங்களுக்கு சென்று அதன் பெருமைகளை அறிந்து, முற்றம் இதழுக்கு அனுப்பி வைத்தால் அவைகள் பிரசுரிக்கப்படும்.

வங்கி

வங்கிகள் நமது பணத்தைப் பாதுகாக்கும் பணியைச் செய்து வருகின்றன. நம்மிடம் அதிகமாக உள்ள பணத்தை வங்கிகள் பெற்று, தேவைப்படுபவர்களுக்கு கடனாக வழங்கி, நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்கும் சேவையைச் செய்து வருகின்றன. அத்தகைய வங்கிகள் குறித்த பல்வேறு செய்திகளும் இப்பக்கத்தில் தொடர்ந்து வெளியிடப்படுகிறது.

வங்கிகளின் பணிகள் மற்றும் வங்கிக் கணக்கின் வகைகள், வங்கிக் கணக்கு துவங்க மேற்கொள்ளப்படும் நடைமுறைகள் போன்றவற்றை கடந்த இதழ்களில் தெரிந்து கொண்டோம். இம்முறை வங்கியின் நடப்புக் கணக்கு குறித்த விபரங்களைத் தெரிந்து கொள்வோம்.

நடப்பு கணக்கு

வங்கியில் கணக்கு வைத்திருப்பவர் தாம் விரும்பும் போது விலக்கிக் கொள்ளும் வகையில் நடப்பு கணக்குகள் அமைந்திருக்கின்றன. நடப்பு கணக்கிலிருந்து ஒரு நாளில் எத்தனை முறை வேண்டுமானாலும் வாடிக்கையாளர் பணத்தைப் பெறலாம். ஆனால் சேமிப்புக் கணக்கில் பணம் பெற வரையறை உண்டு. பொதுவாக தொழில் மற்றும் வணிகத்தில் ஈடுபடுபவர்களால் துவக்கப்படும், இந்த வகை கணக்கில் இருக்கும் பணத்திற்கு வட்டி கிடைக்காது. இருப்பினும் சேமிப்புக் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு வழங்காத சில வசதிகளை நடப்புக் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு வங்கிகள் அளிக்கின்றன.

பயனாளிகள்

வணிகத் தேவைகளுக்காகவும், தொழில் நடவடிக்கை களுக்காகவும் தேவைப்படும் பணத்தை கையாள உருவாக்கப்பட்ட இந்த வகை கணக்குகளை பொதுவாக தொழில் புரிபவர்கள், வர்த்தக நிறுவனங்கள், பொது நிறுவனங்கள் துவக்குகின்றன. நடப்புக் கணக்கு தொழில் அமைப்புகளின் எல்லா நிலைகளிலும் பணப்பரிமாற்றத்திற்காக உருவாக்கப்பட்டுள்ளது.

18 அல்லது அதற்கு மேல் வயது உள்ள அனைத்து இந்திய குடிமக்கள், தனி நபரால் அல்லது கூட்டாக நடத்தப்படும் கம்பெனிகள், நிறுவனங்கள், அறக்கட்டளைகள், கூட்டுறவுகள், இந்து கூட்டு குடும்பங்கள் ஆகிய எவரும் நடப்புக் கணக்கைத் துவக்கலாம். இவ்வகை கணக்கை தனி நபராகவோ அல்லது கூட்டாகவோ தொடங்கலாம்.

வங்கிகள் இவ்வகை கணக்கு துவக்க குறைந்தபட்ச இருப்பாக ரூபாய் 5000 முதல் ரூபாய் 50,000 வரை நிர்ணயித்துள்ளன. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் இத்தொகை குறைந்தபட்ச அளவில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இவ்வகைக் கணக்கை தொடங்குவது மிக எளிது. அடையாளச் சான்று மற்றும் முகவரி சான்று உட்பட தேவைப்படும் ஆவணங்களுடன் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து வங்கியில் கொடுக்க வேண்டும். நடப்புக் கணக்கு துவங்க தேவையான சான்றுகள், வங்கிக்கு வங்கி வித்தியாசப்படும். உதாரணமாக தனியார் வங்கிகளுக்கு தேவைப்படும் ஆவணங்கள், தேசிய மய மாக்கப்பட்ட வங்கிகளுக்கு தேவைப்படும் ஆவணங்களிலிருந்து வேறுபடும்.

நடப்புக் கணக்கு துவங்க விரும்புவோர் வங்கிக்குச் சென்று, வங்கியில் கேட்கும் விபரங்களை அளித்தால், நமது சான்றிதழ்களை பரிசோதித்து நடப்புக் கணக்கு துவங்க அனுமதிப்பார்கள். சில வங்கிகளில் இருப்புத் தொகை செலுத்தச் சொல்லுவார்கள். இருப்புத்தொகையின் அளவு வங்கிக்கு வங்கி வேறுபடும். ■

பொதுவாக தொழில் மற்றும் வணிகத்தில் ஈடுபடுபவர்களால் துவக்கப்படும், இவ்வகை கணக்கில் இருக்கும் பணத்திற்கு வட்டி கிடைக்காது. இருப்பினும் நடப்புக் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு சில வசதிகளை வங்கிகள் அளிக்கின்றன.

இந்திய சினிமா தொடங்கி 100 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி, தமிழக அரசும் தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபையும் இணைந்து இந்திய சினிமா நூற்றாண்டு விழாவை மிக சிறப்பாக கொண்டாடின. இந்நிகழ்ச்சியின் தொடக்க விழா, சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் செப்டம்பர் 21ஆம் தேதி நடைபெற்றது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குத்து விளக்கேற்றி விழாவை தொடங்கி வைத்து, திரையுலகில் 50 ஆண்டுகள் சேவை செய்த 56 கலைஞர்களுக்கு விருதுகளை வழங்கினார்.

மறுநாள் (22.09.2013) காலை கன்னட பட உலகைச் சேர்ந்த நட்சத்திரங்களின் கலைநிகழ்ச்சிகளும், மாலையில் தெலுங்கு படஉலகினரின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. 23ந் தேதி மலையாள பட உலகினரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்திய சினிமா நூற்றாண்டின் நிறைவு விழா, சென்னை நேரு விளையாட்டு அரங்கில் 24.09.2013 அன்று மாலை மேதகு தமிழக ஆளுனர் திரு கே. ரோசய்யா அவர்கள்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கேரள முதலமைச்சர் திரு உம்மன்சாண்டி, கர்நாடக செய்தித்துறை அமைச்சர் திரு சந்தோஷ் லட் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், தலைமை விருந்தினராகக் கலந்து கொண்ட மேதகு இந்திய குடியரசு தலைவர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ் திரையுலகின் வாழ்நாள் சாதனையாளர்களுக்கான விருதினையும் நினைவுப் பரிசினையும் வழங்கி கவுரவித்தார். இதனைத் தொடர்ந்து தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி, மராத்தி, பெங்காலி, குஜராத்தி உள்ளிட்ட பல்வேறு மொழி திரைப்படங்களில் சாதனை படைத்த 40 கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

இவ்விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, ‘ இந்த பிரம்மாண்ட விழாவில் பங்கேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்திய சினிமாவின் புகழ்மிக்க 100 ஆண்டு சாதனைகளைக் கொண்டாடும் வகையில் நடத்தப்படும் இந்த விழா, நமக்கு மிகுந்த பெருமை அளிக்கிறது. ஒரு நூற்றாண்டை நிறைவு செய்து, அடுத்த நூற்றாண்டை நோக்கி வெற்றிகரமாக அடியெடுத்து வைக்கும் இந்தியத் திரைப்படத்துறையின் இந்த விழாவை, தமிழகத்தில் நடத்துவதில் மிகுந்த பெருமிதம் அடைகிறேன்.

இந்திய திரைப்படத்துறை தென் மாநிலங்களில் மிகப் பெரிய வெற்றி நடைபோட்டு வருகிறது. தமிழ், தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னடம் ஆகிய மொழி சினிமாக்கள் தென்னிந்தியாவை

இந்திய சினிமா நூற்றாண்டு விழா கொண்டாட்டம்

எப்பொழுதெல்லாம் நான் முதலமைச்சராக பொறுப்பேற்கிறேனோ, அப்பொழுதெல்லாம் தமிழ் திரைத்துறைக்கு தேவையான அனைத்து ஊக்கமும், உதவிகளையும், ஆதரவையும் அளித்து வருகிறேன்.

ஆக்கிரமித்துள்ளன. இந்திய திரைப்பட உலகுக்கு முதல் பெண் இயக்குனரான 'சினிமா ராணி' என்று அழைக்கப்படும் டி. பி. ராஜலட்சுமியை வழங்கியது தமிழகம்தான் என்பதில் பெருமை அடைகிறேன். அவரை கவுரவிக்கும் வகையில் எனது உத்தரவின் பேரில், அவரது பிறந்த நாள் அண்மையில் அரசு விழாவாக் கொண்டாடப்பட்டது. தமிழக அரசு தமிழ் திரையுலகத்தை ஊக்கப்படுத்தியும், வழிகாட்டியும் அதன் பின்னால் உறுதியாக நிற்கிறது. எப்பொழுதெல்லாம் நான் முதலமைச்சராக பொறுப்பேற்கிறேனோ, அப்பொழுதெல்லாம் தமிழ் திரைத்துறைக்கு தேவையான அனைத்து ஊக்கமும், உதவிகளையும், ஆதரவையும் அளித்து வருகிறேன்.

ரசிகர்கள் இல்லையென்றால், சினிமா கிடையாது. இன்றளவும் இது உண்மையாக இருந்து வருகிறது. ரசிகர்கள் அமோக ஆதரவு அளித்து வருவதால்தான், இந்திய சினிமாத் துறை நூற்றாண்டுக்கும் மேலாக நிலைத்து நீடித்து வருகிறது. எனவே, சினிமாத் துறையினர் அவர்களை மேலும் கவரும் வகையில் நல்ல சினிமாக்களை எடுத்து வழங்க வேண்டும். ரசிகர்கள்தான், சினிமாவை பற்றிய இறுதி தீர்ப்பை வழங்கக் கூடியவர்கள்' என்று குறிப்பிட்டார்.

விழாவில் சிறப்புரையாற்றிய மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் தனது உரையில், 'இன்று உலகத்தில் மிகப் பெரிய தொழிற்சாலையாக இந்திய சினிமா வளர்ச்சி பெற்றுள்ளது, சர்வதேச சினிமா விழாக்களில் இந்தியர்களும் அங்கீகாரம் பெற்று வருகின்றனர். இந்திய சினிமாவில், தென்னிந்திய சினிமா மிகப் பெரிய பங்களிப்பை அளித்துள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் தென்னிந்திய சினிமாவுக்கு சிறந்த பங்களிப்பை அளித்துள்ளார். அவரை இந்திய சினிமா விருதுக்கு தேர்வு செய்தது மகிழ்ச்சி அளிக்கிறது. அவருக்கு எனது வாழ்த்துகள்.

சமூகத்தில் நல்ல மாற்றங்களைக் கொண்டு வரும் துறையாக சினிமாத் துறை இருக்க வேண்டும். ஏனென்றால் சினிமாதான் மக்களிடையே ஊடுருவி இருக்கும் மீடியா. பொழுது போக்குக்காக மட்டுமல்லாமல், சமூகத்துக்குத் தேவையான நல்லொழுக்கத்தையும் அதன் மூலம் வளர்க்க வேண்டும்' என்றார்.

திரைப்பட நட்சத்திரங்களின் கண்கவர் கலை நிகழ்ச்சிகளுடன் வண்ணமயமாக நடைபெற்ற இவ்விழாவில், மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்கள், பல்வேறு துறை அரசு அலுவலர்கள், தமிழ் மற்றும் பிற மொழி திரையுலகைச் சேர்ந்த நடிகர், நடிகைகள், இயக்குநனர்கள், திரைப்படத் தயாரிப்பாளர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள், இசையமைப்பாளர்கள் உட்பட ஏராள மானவர்கள் கலந்து கொண்டனர். ■

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தென்னிந்திய சினிமாவுக்கு சிறந்த பங்களிப்பை அளித்துள்ளார். அவரை இந்திய சினிமா விருதுக்கு தேர்வு செய்தது மகிழ்ச்சி அளிக்கிறது. அவருக்கு எனது வாழ்த்துகள்.

மகளிர் மேளா 2013

நவராத்திரி விற்பனைக் கண்காட்சி

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் சிறப்பாக அரங்குகள் அமைத்து அதிக அளவில் பொருட்களை விற்பனை செய்த மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பரிசுகள், சுய உதவிக் குழுக்களுக்கு அதிக கடன் இணைப்பு வழங்கிய வங்கியாளர்கள், சிறப்பாக செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு விருதுகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு, கிராம அங்காடிகள், கல்லூரி சந்தைகள் மற்றும் மாநில அளவிலான கண்காட்சிகள் மூலமாக மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் விற்பனை வாய்ப்பினை மேம்படுத்திடவும், அவர்களின் வாழ்வாதாரம் முன்னேற்றம் அடைந்திடவும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வாயிலாக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில், தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களைச் சார்ந்த மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்திடும் நோக்கிலும், அப் பொருட்களுக்கான விற்பனை வாய்ப்பினை மேம் படுத்திடவும் சென்னையில் பல்வேறு கட்டங்களாக சிறப்பு கண்காட்சிகள் நடத்தப்படுகிறது. மகளிர் மேளா 2013 'நவராத்திரி' கண்காட்சி என்னும் கருப்பொருளுடன் 26.09.2013 அன்று சென்னை, நுங்கம்பாக்கம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலையில் உள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நவராத்திரி விற்பனைக் கண்காட்சி தொடங்கியது. மகளிர் திட்டம், புதுவாழ்வு திட்டம், பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் (IFAD) கீழ் செயல்படும் சுய உதவிக் குழுக்கள் மற்றும் திருநங்கையர், மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கும் இக்கண்காட்சியில் விற்பனை அரங்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

மகளிர் மேளா 2013 நவராத்திரி விற்பனைக் கண்காட்சியில் சிறப்பாக அரங்குகள் அமைத்திட 32 மாவட்டங்களில் இருந்தும் மகளிர் திட்டத்தின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழுக்கள் தெரிவு செய்யப்பட்டு அவைகளுக்கு அரங்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

இக்கண்காட்சியில் சிறப்பாக அரங்குகள் அமைத்து, அதிக அளவில் பொருட்களை விற்பனைச் செய்த மாவட்ட அளவிலான மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு பரிசளிக்கும் விழா, சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் சிறந்த வங்கியாளர்களுக்கு விருதுகள் வழங்கும் விழா 15.10.2013 அன்று சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்றது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு கே.பி.முனுசாமி அவர்கள் கலந்து கொண்டு விருதுகளை வழங்கி விழாப் பேருரையாற்ற,

மகளிர் மேளா 2013 'நவராத்திரி' கண்காட்சி என்னும் கருப்பொருளுடன் நடைபெற்றது

கடந்த ஆண்டு மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பொருளாதாரம் மேம்பட வங்கிகள் மூலம் கடன் இணைப்பாக ரூ. 4030 கோடி வழங்கி சாதனை படைக்கப்பட்டது. இச்சாதனைக்கு வங்கியாளர்களின் பங்கு மிக முக்கியமானது ஆகும். இச்சாதனை தொடர இந்த ஆண்டு ரூபாய் 6000 கோடி கடன் இணைப்பு வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. பா. வளர்மதி அவர்கள் சிறப்புரை நிகழ்த்த, வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு சைதை சா. துரைசாமி அவர்கள் முன்னிலையில் இவ்விழா சிறப்புற நடைபெற்றது.

சென்னை மாநகராட்சி 9வது மண்டலக் குழுத் தலைவர் திரு எஸ். சக்தி அவர்கள், சென்னை மாநகராட்சி 110வது மாமன்ற உறுப்பினர் திரு கே. சந்திரசேகரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியின் தலைவர் திரு. ஆர். இளங்கோவன் அவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.

முன்னதாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அரசு முதன்மைச் செயலர் திரு. நா.ச. பழனியப்பன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையுரை ஆற்ற, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுநிறுவனமேலாண்மைஇயக்குநர் திருமதி மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

இவ்விழாவில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது, 'கடந்த ஆண்டு மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பொருளாதாரம் மேம்பட வங்கிகள்மூலம்கடன்இணைப்பாகரூ.4030 கோடி வழங்கி சாதனை படைக்கப்பட்டது. இச்சாதனைக்கு வங்கியாளர்களின் பங்கு மிக முக்கியமானது ஆகும். இச்சாதனை தொடர இந்த ஆண்டு ரூபாய் 6000 கோடி கடன் இணைப்பு வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தர விட்டுள்ளார்கள். மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் பொருளாதாரம் மென் மேலும் வளர வங்கியாளர்கள் இவ்வாண்டு ரூ. 6000 கோடி கடன் இணைப்பு வழங்க வேண்டும்' எனக் கூறினார்.

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் தனது உரையில், 'மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மகளிர் மற்றும் குழந்தைகள் குறிப்பாக பெண் குழந்தைகளுக்கென பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து, அவர்கள் தம் வாழ்க்கையில் மதிப்புடன் வாழவும், எதிர்காலத்தில் நல்ல முன்னேற்றத்தினை அடையவும், பல நல்ல வாய்ப்புகளை ஏற்படுத்தி தந்துள்ளார்கள். இவ்வாய்ப்பு களை அனைத்து மகளிரும் பயன்படுத்தி வாழ்க்கையில் முன்னேற்றம் அடைந்திட வேண்டும்' என்று குறிப்பிட்டார்.

வங்கியாளர்களுக்கு விருதுகள்

மகளிர் மேம்பாட்டில் முக்கிய பங்காற்றி வரும் வங்கிகள், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பெருமளவில் நிதி உதவியினை வழங்கி அவர்களை பொருளாதார மேம்பாடு அடையச் செய்து வருகின்றன. எனவே வங்கியாளர்களை கௌரவிக்கும் விதமாக சிறந்த வங்கிகள் மற்றும் வங்கிக் கிளைகளுக்கு விருதுகளை மாநில மற்றும் மாவட்ட அளவில் அரசு நிறுவி உள்ளது. இவ்விழாவில் மாநில அளவில் சிறந்த முறையில் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பு வழங்கிய இந்தியன் வங்கி, கிராம பல்லவன் வங்கி, தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றிற்கு பாராட்டுச் சான்றிதழுடன் கூடிய விருதும், சுய உதவிக் குழுக்கள் / மகளிர் தொழில் முனைவோருக்காக செயல்படும் வங்கிக் கிளைகளுக்கான விருதினை சென்னை இந்தியன் வங்கி மைக்ரோசாட் – 1 கிளை, கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டினம் பாரத ஸ்டேட் வங்கி, ஆர்.எம்.ஓய். கிளை ஆகியவற்றுக்கு காசோலையுடன் கூடிய விருதினையும், இதர வங்கிக் கிளைகளான கிருஷ்ணகிரி மாத்தூர் இந்தியன் வங்கி, வேலூர் குடியாத்தம் மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் தர்மபுரி காரிமங்கலம் இந்தியன் வங்கி ஆகியவற்றுக்கு காசோலையுடன் கூடியவிருதுகளையும்மாண்புமிகுநகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பாராட்டு சான்றிதழ்

தமிழ்நாடு அரசு சிறப்பாகச் செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் செயல்பாட்டிற்கு அங்கீகாரம் வழங்க மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் விருதுகளை வழங்கி வருகிறது. இவ் விருதுகள் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் செயல்பாடுகளை ஊக்குவிப்பதோடு அவை களுக்குள் ஆரோக்கியமான போட்டியையும் உருவாக்குகின்றன.

ஆண்டுதோறும் மாவட்ட அளவில் ஒரு சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு பாராட்டுச் சான்றிதழ்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மகளிர் மற்றும் குழந்தைகள் குறிப்பாக பெண் குழந்தைகளுக்கென பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து, அவர்கள் தம் வாழ்க்கையில் மதிப்புடன் வாழவும், எதிர்காலத்தில் நல்ல முன்னேற்றத்தினை அடையவும், பல நல்ல வாய்ப்புகளை ஏற்படுத்தி தந்துள்ளார்கள்.

மற்றும் ரொக்க பரிசாக ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது.

மாவட்ட அளவில் சிறப்பாக செயல்பட்ட 27 மாவட்டங்களைச் சார்ந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினருக்கு பாராட்டுச் சான்றிதழ் மற்றும் ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் வழங்கி கூட்டமைப்புகளைப் பாராட்டினார்.

சிறப்பாக விற்பனை செய்த குழுக்களுக்கு பரிசுகள்

26.09.2013 முதல் 17.10.2013 வரை நடைபெற்ற கண்காட்சியில், சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை அதிகம் விற்பனை செய்த காஞ்சிபுரம் ஸ்ரீ ரேணுகாம்பாள் சுய உதவிக் குழுவிற்கு முதல் பரிசினையும், சென்னை அமுதசுரபி மற்றும் தஞ்சாவூர் தாமரை ஆகிய குழுக்களுக்கு இரண்டாம் பரிசினையும், கோவை ஸ்ரீராகவேந்திரா மற்றும் திருவண்ணாமலை காமதேனு ஆகிய குழுக்களுக்கு மூன்றாம் பரிசினையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கி பாராட்டினார்.

மேலும் புதுவாழ்வு திட்டத்தை சேர்ந்த வெள்ளி விழா ஒத்த தொழில் குழு, சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டத்தினைச் சேர்ந்த அருவி சுய உதவிக் குழு ஆகியவற்றிற்கும், நவராத்திரி கண்காட்சியில் சிறப்பாக பணியாற்றிய சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த சமுதாய வள பயிற்றுநர்களான திருமதி. மைதிலி, திருமதி உமா மகேஷ்வரி, திருமதி கலைவாணி மற்றும் மகேஷ்வரி ஆகியோருக்கும், காஞ்சிபுரம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களின் வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கத்தின் மேலாளர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்கள்.

பணி நியமன ஆணை

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தில் பணிபுரிந்து மறைந்த திரு எஸ். மோகன்ராஜ் அவர்களின் துணைவியார் திருமதி எம். ஷோபனா அவர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிக்கான பணி நியமன ஆணை யை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

மிகவும் சிறப்பாக நடைபெற்ற இவ்விழா தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன கூடுதல் இயக்குநர் திரு கோ. ராதா அவர்களின் நன்றி நவில்தலுடன் இனிதே நிறைவு பெற்றது. இச்சிறப்புமிகு விழாவிற்கான ஏற்பாடுகளை கூடுதல் இயக்குநர்கள் முனைவர் ம. மனோகர சிங் மற்றும் திருமதி எம். மாதவி ஆகியோர் செய்திருந்தனர். ■

தமிழ்நாடு அரசு சிறப்பாகச் செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் செயல்பாட்டிற்கு அங்கீகாரம் வழங்க மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் விருதுகளை வழங்கி வருகிறது. இவ்விருதுகள் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் செயல்பாடுகளை ஊக்குவிப்பதோடு அவை களுக்குள் ஆரோக்கியமான போட்டியையும் உருவாக்குகின்றன.

விருதுகள் உற்சாகத்தையும் நம்பிக்கையையும் தந்துள்ளன.

புத்தூர் ஆபரேஷன் குழுவிற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பரிசு - பதவி உயர்வு

தீரமுடன் போரிட்ட போலீசாருக்குப் புகழாரம்

தமிழகத்தில் பல குற்றச் செயல்களுக்குத் துணை போன குற்றவாளிகள் ஆந்திர மாநிலம் புத்தூரில் பதுங்கியிருந்தனர். அவர்களைப் பிடிப்பதற்காக ஏறக்குறைய பத்து மணி நடைபெற்ற வேட்டையில் தீரமுடன் போரிட்டு தீவிரவாதிகளை கைது செய்த தமிழக போலீசாரை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளார். இக்குழுவில் இடம் பெற்ற காவல்துறையினருக்கு ரொக்கப் பரிசும், பதவி உயர்வும் அறிவித்து உத்தரவிட்டார்.

அதன்படி புத்தூர் வேட்டையில் ஈடுபட்ட 20 காவல்துறையினருக்கு தலா ஐந்து லட்சம் ரூபாயினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரடியாக வழங்கினார். குற்றவாளிகளைப் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டபோது, தாக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் ஆய்வாளர் திரு லட்சுமணனை மருத்துவமனைக்குச் சென்று பார்த்து ஆறுதல் கூறிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அவருக்கு 15 லட்சம் ரூபாயினை வழங்கினார்.

மேலும் பயங்கரவாதிகள் வேட்டைக்கு உதவிய 245 காவல்துறையினருக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வழங்க ஆணையிட்டதுடன், ஆய்வாளர் திரு வீரகுமார் அவர்களுக்கு ரூ. ஐந்து லட்சம் வழங்கவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். ■

குற்றவாளிகளைப் பிடிப்பதற்காக நடைபெற்ற வேட்டையில் தீரமுடன் போரிட்டு குற்றவாளிகளை கைது செய்த தமிழக போலீசாரை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

ஏழை மக்களின் வாழ்வாதாரம் உயர

கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்டங்களை செயல்படுத்த முதற்கட்ட மாவட்டங்களான கடலூர், தர்மபுரி, திண்டுக்கல், ஈரோடு, நாகப்பட்டினம், நீலகிரி, பெரம்பலூர், அரியலூர், இராமநாதபுரம், தஞ்சாவூர், திருவண்ணாமலை, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, வேலூர், விழுப்புரம் என மொத்தம் 15 மாவட்டங்களில் உள்ள 2,323, ஊராட்சிகளில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களை அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மிகவும் வறிய நிலையிலுள்ளவர்களை மையப்படுத்தி, அவர்களின் வறுமை நிலைமையை அகற்றுவதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முந்தைய ஆட்சிக் காலத்தில் 'புதுவாழ்வுத் திட்டம்' என்ற ஒரு திட்டம், உலக வங்கியின் நிதி உதவியுடன் 2005ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இத்திட்டம் தமிழகத்தின் 120 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின் சிறப்பான செயல்பாட்டினை தொடர்ந்து வறிய நிலையிலுள்ள அனைத்து ஏழைக் குடும்பங்களைக் கண்டறிந்து அவர்களுக்கான நிலைத்த வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குவது, அவர்களின் வாழ்வாதார நிலையை உயர்த்தி ஏழ்மையிலிருந்து அவர்கள் விடுபடும் வரை பாதுகாப்பது மற்றும் தரமான வாழ்க்கையை உருவாக்குவதற்காக தமிழகத்தின் ஏனைய 265 ஊராட்சி ஒன்றியங்களிலும் செயல்படும் வண்ணம் மாநில அரசு ஊரக வாழ்வாதார இயக்கம் 2012–13ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டிலுள்ள ஊரகப் பகுதிகளை உள்ளடக்கிய 31 மாவட்டங்களில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களுக்கு 5 முதல் 7 வருடங்களுக்கு நீடித்த தன்மையுடைய வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குவது இந்த இயக்கத்தின் உயரிய நோக்கமாகும். ஏழை மக்களுக்கான அமைப்புகளை உருவாக்கி, அவற்றின் மூலமாக ஏழை மக்கள் நிதி ஆதாரங்கள் பெறுதல், வாழ்வாதாரத்திற்கு தேவையான உதவிகள், பொதுச் சேவைகள் மற்றும் அரசினால் வழங்கப்பட வேண்டிய உரிமைகள் ஆகியவற்றைப் பெற்றுத் தருவதில் இந்த இயக்கம் முனைப்புடன் செயல்படுகிறது. இவ்வியக்கத்தின் நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்காக மாநில, மாவட்ட, வட்டார மற்றும் தொகுதி அளவில் தனி நிர்வாக அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வியக்கத்தின் நடவழக்கைகளை செயல்படுத்துவதற்காக மாநில, மாவட்ட, வட்டார மற்றும் தொகுதி அளவில் தனி நிர்வாக அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் 2012–12ஆம் ஆண்டு முதல் மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இயக்கத்தின் திட்டங்களை செயல்படுத்த முதற்கட்ட மாவட்டங்களான கடலூர், தர்மபுரி, திண்டுக்கல், ஈரோடு, நாகப்பட்டினம், நீலகிரி, பெரம்பலூர், அரியலூர், இராமநாதபுரம், தஞ்சாவூர், திருவண்ணாமலை, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, வேலூர், விழுப்புரம் என மொத்தம் 15 மாவட்டங்களில் உள்ள 2,323, ஊராட்சிகளில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களை அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மக்கள் நிலை ஆய்வின் மூலம் ஏழைகள், மிகவும் ஏழைகள், நலிவுற்றோர், ஆதரவற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் கண்டறியப்பட்டு, இவர்களின் வாழ்வாதாரம் உயரவும், வாழ்க்கைத் தரம் மேம்படவும், சமூகத்தில் இவர்கள் உயரிய நிலையினை அடைவதற்கும் மற்றும் சொந்தத் தொழில் புரிபவர்களுக்கும் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மூலம் நிதியுதவி வழங்கிட, இச்சங்கங்களுக்கு சமுதாய முதலீட்டு நிதியாக 2,323 ஊராட்சிகளுக்கு, ஊராட்சி ஒன்றுக்கு 10 லட்சம் ரூபாய் என மொத்தம் 232 கோடியே 30 லட்சம் ரூபாய் நிதியினை விடுவித்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம் ஏழை, எளிய மக்கள், நலிவுற்றோர்களின் வாழ்வாதார நிலையில் ஏற்றம் ஏற்பட வழிவகை ஏற்படும். ■

சுவையும், சத்துக்களும் நிறைந்த உணவுகளை அனைவரும் விரும்புவார்கள் நீரிழிவால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் வாழைப்பூ வடையை விரும்பி சாப்பிடுவார்கள்.

வாழைப்பூ வடை

தேவையானவை

நறுக்கிய வாழைப்பூ – இரண்டு கைப்பிடி, துவரம் பருப்பு, கடலைப் பருப்பு – ஒரு கப், உளுத்தம் பருப்பு – கால் கப், காய்ந்த மிளகாய் – நான்கு, இஞ்சி – ஒரு துண்டு, மஞ்சள் தூள் – கால் டீஸ்பூன், பெருங்காயத்தூள் – சிறிதளவு, எண்ணெய், உப்பு – தேவையான அளவு

செய்முறை

துவரம் பருப்பு, கடலைப் பருப்பு, உளுத்தம் பருப்பு ஆகிய மூன்றையும் சேர்த்து தண்ணீரில் ஊற வைக்கவும். இவைகள் நன்கு ஊறியதும் தண்ணீரை வடிகட்டி விட்டு, ஊறிய பருப்புகளுடன் காய்ந்த மிளகாய், இஞ்சி போட்டு கெட்டியாக அரைத்து வைத்துக் கொள்ளவும். அடுப்பில் வாணலியை வைத்து சிறிது எண்ணெய் ஊற்றி அதில் வாழைப்பூவை போட்டு வதக்கி, அந்த பூவை அரைத்த வைத்துள்ள மாவில் போட்டு, உப்பு, மஞ்சள் தூள், பெருங்காயத்தூள் ஆகியவற்றை சேர்த்து நன்கு பிசையவும். கடாயில் எண்ணெய் ஊற்றி, அடுப்பில் வைத்து எண்ணை நன்கு காய்ந்ததும் அதில் பிசைந்து வைத்துள்ள வாழைப்பூ மாவை வடைகளாகத் தட்டிப் போட்டு, நன்கு வேகவிட்டு எடுக்கவும். இந்த வாழைப் பூ வடை லேசான துவர்ப்புச் சுவையில் இருப்பதால், நீரிழிவு நோயாளிகளுக்கு மிகவும் நல்லது. ■

விளாம்பழம்

கடினமான மேல் ஓட்டினைக் கொண்டுள்ள விளாம்பழம் பல்வேறு மருத்துவ குணங்களைக் கொண்டுள்ளது. இளம் பெண்களுக்கு பெரும் பிரச்சனையாக விளங்கும் முகப் பருவை விளாம்பழம் போக்குகிறது.

பயத்தம்பருப்பு 2 டீஸ்பூன், விளாங்காய் விழுது 2 டீஸ்பூன், பாதாம்பருப்பு 2 ஆகியவற்றை முதல் நாள் ஊறவைத்து, மறு நாள் மைபோல அரைத்து, அதை முகப்பரு உள்ள இடத்தில் பூசினால் நாட்பட்ட பருக்களும் மறைந்து விடும்.

சுருள் பட்டை 100 கிராம், வெந்தயம் 2 டீஸ்பூன், வெட்டிவேர் 10 கிராம், விளா மர இலை 50 கிராம் ஆகியவற்றை கால் லிட்டர் தேங்காய் எண்ணெயில் போட்டு ஒரு வாரம் தொடர்ந்து வெயிலில் காய வைத்து எடுத்து வடிகட்டி பாட்டிலில் அடைத்து வைத்துக் கொண்டு, தினமும் இந்த தைலத்துடன் தேங்காய் எண்ணெயை கலந்து தலை முடியின் வேர்க்கால்கள் வரை நன்கு தடவுங்கள். முடி கொட்டுவது நிற்பதுடன், கருகருவென நன்கு வளரும்.

தசை வளர்ச்சி, உடல் வளர்ச்சிக்கான சத்துக்கள் நிறைந்த பழமான விளாம்பழம், ரத்தத்தை சுத்திகரித்து, ரத்த விருத்தியும் செய்கிற சிறப்பு உடையது. விளாம்பழத்தில் வைட்டமின் பி2 மற்றும் கால்சியம் அதிகமாக இருப்பதால் பல் மற்றும் எலும்புகளை வலுவடையச் செய்கிறது. தயிருடன் சேர்த்து விளாங்காயை பச்சரிசி போல் செய்து சாப்பிட வாய்ப்புண், வயிற்றுப்புண் போன்றவை குணமாகும்.

வெல்லத்துடன் விளாம்பழத்தை சேர்த்து பிசைந்து சாப்பிட்டு வர நரம்புத் தளர்ச்சி நீங்கும். விளாம்பழத்துடன் பனங்கற்கண்டைக் கலந்து சாப்பிட, பித்தக் கோளாறுகளால் ஏற்படும் வாந்தி, தலைச்சுற்றல் நீங்கும், குழந்தைகளுக்கு நினைவாற்றல் பெருக தினமும் விளாம்பழத்தைச் சாப்பிட தருவது நல்லது.

விளா மர இலையை தண்ணீரில் போட்டு, கொதிக்க வைத்துக் குடிக்க, வாயுத் தொல்லை நீங்கும். சர்க்கரையுடன் விளாம்பழத்தை சேர்த்து பிசைந்து ஜாம் போல் செய்து சாப்பிட, ஜீரண சக்தி அதிகரிப்பதுடன் நன்கு பசி எடுக்கும். ■

விளாம்பழத்தில் வைட்டமின் பி2 மற்றும் கால்சியம் போன்ற சத்துக்கள் அதிகமாக இருப்பதால் பல் மற்றும் எலும்புகளை வலுவடையச் செய்கிறது.

கேள்வி–பதில்



கேள்வி:

NIGHT BLINDNESS' எனப்படும் மாலைக்கண் நோய் இருப்பவர்களுக்கு சூரியன் மறைந்ததும் கண் தெரியாமல் போவது ஏன்?

பதில்:

மாலைக்கண் நோய் உள்ளவர்களுக்கு பிரகாசமான வெளிச்சம் இருந்தால் மட்டுமே அவர்களால் பொருள்களை நன்றாகப் பார்க்க முடியும். சூரிய ஒளிக்கு மட்டுமே அந்த சக்தி உள்ளது. சூரிய ஒளியை விட குறைவாக இருக்கும் வெளிச்சத்தில் சரிசெய்து கொள்ளும் விழித்திரை செல்கள் அவர்களுக்கு மிகவும் குறைவாக இருப்பதால் சூரியன் மறைந்த உடனேயே அவர்களுடைய பார்வை மங்கிப் போய் விடுகிறது. இந்த மாலைக் கண் நோய் ஏற்படுவதற்குக் காரணம் வைட்டமின் 'ஏ' பற்றாக்குறைதான். குழந்தைகளுக்கு மூன்று வயது முதலே பால், கீரை, பப்பாளி, கேரட், மீன், முட்டை, பழங்கள் போன்றவை கொடுத்து வந்தால் கண் சம்பந்தப்பட்ட அனைத்து நோய்களையும் தவிர்க்கலாம்.

கேள்வி:

சிலருக்கு இடதுகைப்பழக்கம் ஏன் ஏற்படுகிறது. அதை மாற்றலாமா?

பதில்:

நமது மூளையின் வலப்பக்கம் உடம்பின் இடதுபக்க உறுப்புகளையும், இடப்பக்கம் உடம்பின் வலதுபக்க உறுப்புகளையும் தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளன. மனிதர்களில் 90 சதவீதம் பேருக்கு இடப்பக்கம் அதிக சக்தி வாய்ந்ததாக இருக்கிறது. எனவே அவர்கள் வலதுகை பழக்கம் உடையவர்களாக இருக்கிறார்கள். மீதமுள்ள 10 சதவீதம் பேருக்கு மூளையின் வலப்பக்கம் சக்தி வாய்ந்ததாக இருப்பதால் அவர்கள் இடதுகைப் பழக்கம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். இந்தப் பழக்கத்தை இவர்கள் மாற்ற முயற்சி செய்தால் பேச்சிலும், பார்வையிலும் குறைபாடுகள் ஏற்படும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ■

பயனுள்ள குறிப்புகள்...

இயற்கைப் பொருட்களைக் கொண்டே நம் அழகையும் பராமரிக்கலாம்

அழகைப் பராமரிக்கும் இயற்கைப் பொருட்கள்

அன்றாடம் நாம் பயன்படுத்தும் இயற்கைப் பொருட்களைக் கொண்டே நம் அழகையும் பராமரிக்கலாம். அத்தகைய சில இயற்கைப் பொருட்களை பற்றி தெரிந்து கொள்வோம்.

முட்டைக்கோஸ்

சிலருக்கு கழுத்து மற்றும் தோள் பகுதிகளில் கருப்பு நிறமாக இருக்கும். எலுமிச்சம் பழச் சாறு, முட்டைக்கோஸ் சாறு, தேன் ஆகியவற்றை கலந்து கருப்பு நிறமுள்ள பகுதிகளில் பூசினால் கருப்பு நிறம் மாறும்.

வேப்பிலை

மாலையில் ஒரு கைப்பிடி வேப்பிலையை 1 கப் தண்ணீரில் ஊற வைத்து மறுநாள் காலை அந்தத் தண்ணீரில் முகம் கழுவி வந்தால் முகப்பரு வராது. முகமும் பளிச்சிடும்.

மருதாணி

கறிவேப்பிலை, மருதாணி இரண்டையும் சேர்த்து அரைத்து, அதனுடன் வெந்தயம், காய வைத்த செம்பருத்திப் பூ ஆகியவற்றை சேர்த்து, தேங்காய் எண்ணெயில் ஊற வைத்து, அந்த எண்ணெயை தினமும் தலையில் தேய்த்து வந்தால் முடி அடர்த்தியாவும், கருப்பாகவும் வளரும்.

> மாறி வரும் சுற்றுச்சூழலுக்கு ஏற்ப நமது உடல் நலத்தைக் காக்க வேண்டியது அவசியம். இயற்கைப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் அழகு சாதனங்கள் நம் உடல் நலத்தைக் காப்பதுடன், பக்க விளைவுகள் ஏற்படாமலும் தடுக்கின்றன. எனவே இயற்கையை காக்க வேண்டியது அவசியம்.

> இயற்கை நமக்கு தந்துள்ள பல அரிய பொருட்கள் நம் உடல் நலத்தைக் காக்கும் தன்மை கொண்டவையாக உள்ளன.

வெள்ளரி

நாட்டு தக்காளி, வெள்ளரி, சிறிது புதினா ஆகியவற்றை சேர்த்து அரைத்து, அந்தக் கலவையை முகத்தில் பூசி வந்தால் முகச்சுருக்கம் மறைந்து விடும்.

அருகம்புல்

நல்ல தளிர் அருகம்புல்லை சேகரித்து, சுத்தமாக நீரில் கழுவி, நன்கு அரைத்து, பசும்பாலுடன் சேர்த்து சுண்டக்காய்ச்சி, இரவில் படுக்கச் செல்லும் முன் அந்தப் பாலை அருந்தி வந்தால், பலவீனமான உடல் நன்கு தேறி பலம் பெறும். ■

வெள்ளைப்பூண்டு

உடல் ஆரோக்கியத்தைக் காப்பதில் வெள்ளைப்பூண்டு மிகச் சிறந்த பங்கினை அளிக்கிறது. இது ரத்தத்தில் உள்ள தேவையற்ற கொழுப்புகளை அகற்றி, ரத்தத்திற்குப் புத்துணர்ச்சி அளிக்கிறது. நம் உடலில் உள்ள இறந்து போன செல்களை நீக்குவதோடு, புதிய செல்களை ரத்தத்தில் விரைந்து உற்பத்தி செய்கிறது. எனவே வெள்ளைப் பூண்டினை அதிக அளவில் உணவில் சேர்த்துக் கொள்வது உடல் நலத்திற்கு மிகவும் நல்லது என்று உணவியல் நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர். ■



பாகற்காய்

பாகற்காய் வேக வைத்த நீரை மதிய உணவிற்கு முன்பாக பருகி வருவதும், வாரம் 2–3 முறை பாகற்காயை உணவில் சேர்த்துக் கொள்வதும் நீரிழிவு நோயினை கட்டுக்குள் வைத்திருக்கும். 2 தேக்கரண்டி பாகற்காய் இலை சாற்றை அரை டம்ளர் மோரில் கலந்து 30 நாட்கள் காலை வெறும் வயிற்றில் பருகினால் மூல நோய் குணமாகும். மூட்டுவலி உள்ளவர்கள் பாகற்காயை சாப்பிட்டு வந்தால் வலி குறையும். ■

கற்பூரவல்லி

நல்ல கனமான வட்ட வடிவமுடன் வாசனை மிகுந்த இலைகளைக் கொண்ட கற்பூரவல்லி குழந்தைகளை தாக்கும் சளி மற்றும் கபத்தைப் போக்கும் அருமருந்தாகும். இரண்டு கற்பூரவல்லி இலைகளைக் கழுவி, நசுக்கி சாறு பிழிந்து, அதனுடன் 1/2 தேக்கரண்டி தேன் கலந்து சாப்பிட்டால் ஜலதோசம், இருமல் போன்றவை நீங்கும். சிறு பூச்சிக் கடிகள், ஒவ்வாமை போன்றவற்றால் உடலில் ஏற்படும் தடிப்புகள், எரிச்சல் போன்றவற்றிற்கு கற்பூரவல்லி சாறினை தடவினால் உடனடி நிவாரணம் கிடைக்கும். ■

தமிழகத்தில் மக்கள் நிலை ஆய்வுப் பணிகள்

தமிழ்நாடு அரசுக்கு பாராட்டு!

தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் புதுவாழ்வு திட்டம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் மக்கள் நிலை ஆய்வுப் பணிகளை 18 மாநிலங்களை சார்ந்த முதன்மைச் செயல் அலுவலர்கள் நேரில் பார்வையிட்டனர். .

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் உலக வங்கி நிதி உதவியுடன் தமிழகத்தில் தோற்றுவிக்கப்பட்ட புதுவாழ்வு திட்டத்தின் கோட்பாடுகள், கொள்கைகள் மற்றும் அணுகுமுறைகளை பின்பற்றி மத்திய அரசு பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்பு திட்டத்தினை மாற்றியமைத்து, தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் என்ற பெயரில் நமது மாநிலத்தில் செயல்படுத்தப்படும் இவ்வியக்கம், புதுவாழ்வு திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு, மக்களே மக்களை இயக்கும் அணுகுமுறையினை பின்பற்றுகிறது. தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 385 வட்டாரங்களில், 120 வட்டாரங்களில் புதுவாழ்வு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மீதமுள்ள 265 வட்டாரங்களில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் 2012–13ஆம் ஆண்டு முதல் மூன்று கட்டங்களாக படிப்படியாக செயல்படுத்தப்படும். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தால் விளம்பரப் பணிகள், மக்கள் நிலை ஆய்வுப் பணிகள், வறுமை ஒழிப்பு சங்கங்கள் அமைத்தல், விடுபட்ட மக்களில் இருந்து சுய உதவிக் குழுக்களை உருவாக்குதல், இளைஞர் தொழில் திறனை மேம்படுத்துதல், கடன் இணைப்பு பெற்றுத் தருதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

> தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் 2012–13ஆம் ஆண்டு முதல் மூன்று கட்டங்களாக படிப்படியாக செயல்படுத்தப்படும். இவ்வியக்க செயல்பாட்டிற்கான மொத்த மதிப்பீடு 2828.29 கோடி ரூபாயில் 707.07 கோடி ரூபாயினை தமிழ்நாடு அரசு வழங்கும். இதன் மூலம் 28.73 லட்சம் குடும்பங்கள் பயனடையும்.

இப்பணிகளைப் பார்வையிட குறிப்பாக மக்கள் நிலை ஆய்வுப் பணிகளை பார்வையிட அஸ்ஸாம், ஆந்திர பிரதேசம், கர்நாடகா, குஜராத், ஜம்மு–காஷ்மீர், சட்டீஸ்கர், ஹரியானா, ஜார்கண்ட், பஞ்சாப், ராஜஸ்தான், மேற்கு வங்காளம், உத்தரகாண்ட், பீகார், மகாராஷ்டிரம், ஒடிசா, கேரளா, இமாச்சல பிரதேசம் மற்றும் உத்தர பிரதேசம் ஆகிய 18 மாநிலங்களிலிருந்து ஊரக வாழ்வாதார இயக்க முதன்மைச் செயல் அலுவலர்கள் தலைமையில் சுமார் 65 உயர் அலுவலர்கள் தமிழகம் வருகை தந்தனர்.

05.10.2013 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலை நகரில் உள்ள மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி மையத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் புதுவாழ்வு திட்டங்கள் செயல்படும் விதம் குறித்து பயிற்சி பட்டறை மூலம் இக்குழுவினருக்கு விளக்கி கூறப்பட்டது. இப்பயிற்சி

07.10.2013 அன்று மாலை பல்வேறு மாநிலங்களிலிருந்து வருகை தந்த முதன்மைச் செயல் அலுவலர்கள் மற்றும் பிற உயர் அலுவலர்கள் அன்னை தெரஸா மகளிர் வளாகத்தில் நடைபெற்ற மகளிர் மேளா நவராத்திரி கண்காட்சியினைப் பார்வையிட்டு, சுய உதவிக் குழுவினரின் உற்பத்திப் பொருட்களின் தயாரிப்பு முறைகள் குறித்த விபரங்களைக் கேட்டறிந்ததுடன், பொருட்களையும் ஆர்வமுடன் வாங்கிச் சென்றனர்.

மக்கள் நிலை ஆய்வுப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டனர்.

பட்டறை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பின்பு 05.10.2013 அன்று மதியம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஆதவபாக்கம் மற்றும் காவனூர் புதுச்சேரி ஆகிய கிராமங்களுக்கு சென்று தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் புதுவாழ்வு திட்டம் மூலம் மேற்கொள்ளப்படும் மக்கள் நிலை ஆய்வுப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு தெரிந்து கொண்டனர்.

இக்குழுவினர் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து, 06.10.2013 அன்று காஞ்சிபுரம் வாலாஜாபாத் வட்டாரத்தில் உள்ள புதுப்பாக்கம் மற்றும் கோவிந்தவாடி ஆகிய பஞ்சாயத்துக்களை பார்வையிட்டனர். இந்த பஞ்சாயத்துக்களில் மக்கள் நிலை ஆய்வு குறித்து மக்களுக்கு தகவல் தெரிவித்தல், மக்கள் நிலை ஆய்வு நடத்தும் ஆய்வுக் குழுவினை தெரிவு செய்து, பயிற்சி அளித்தல், கிராம அளவில் கூட்டம் நடத்துதல், கிராம நடை பயணம், சமூக வரைபடம் வரைதல், பொருளாதார தரம் பிரித்தல் வகைகள், நலிவுற்றோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் பழங்குடியினரை கண்டறிதல், மக்கள் நிலை ஆய்வு இறுதி பட்டியல் சரிபார்த்தல், அனைத்து தகவல்களையும் ஆவணப்படுத்துதல், இலக்கு மக்கள் பட்டியலை வெளியிடுதல், மக்கள் நிலை ஆய்வு பட்டியலில் முரண்பாடுகளை தீர்த்து வைத்தல், இலக்கு மக்கள் பட்டியலை கிராம சபையில் அங்கீகாரம் பெறுதல் போன்ற பணிகளை உறுப்பினர்களிடம் பார்த்தும், கேட்டும் தெரிந்து கொண்டனர்.

07.10.2013 அன்று சென்னையில் மக்கள் நிலை ஆய்வு குறித்த கருத்தரங்கு மத்திய அரசின் ஊரக வளர்ச்சித் துறை கூடுதல் செயலாளர் திரு எஸ். எம். விஜய் ஆனந்த், இ.ஆ.ப., அவர்களின் தலைமையிலும், தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் திரு ச.வி. சங்கர், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

திருமதி சாரதா முரளிதரன், இ.ஆ.ப., முனைவர் அமித்வா முகர்ஜி மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி. மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப., ஆகியோர் உட்பட 18 மாநிலங்களின் முதன்மைச் செயல் அலுவலர்கள் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர். பின்னர், திருப்போரூர் வட்டாரத்தில் உள்ள கொளத்தூர் மற்றும் சோனலூர் ஆகிய கிராமங்களுக்கு சென்று மக்கள் நிலை ஆய்வுப் பணிகளை இக்குழுவினர் பார்வையிட்டனர்.

08.10.2013 அன்று சென்னை, அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனத்தில், மேற் கண்ட குழுவினர் தாங்கள் தமிழகத்தில் நேரில் சென்று பார்வையிட்ட வட்டாரங் களில் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் புதுவாழ்வு திட்டம் மூலம் எவ்வாறு மக்கள் நிலை ஆய்வுப் பணிகள் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் தமிழ் நாட்டில் மேற்கொள்ளப்படும் மக்கள் நிலை ஆய்வு பணிகள் குறித்த விபரங் களைக் கொண்ட விளக்கப்படம் அமைக்கப்பட்டிருந்தது.

இக்கருத்தரங்கிற்கு, மத்திய அரசின் ஊரக வளர்ச்சித்துறை இணைச்செயலாளர் திரு டி. விஜயகுமார், இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கினார். தமிழக அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலாளர் திரு ச.வி.சங்கர், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் 18 மாநிலங்களைச் சார்ந்த ஊரக வாழ்வதார இயக்க முதன்மைச் செயல் அலுவலர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தமிழகத்தில் மக்கள் நிலை ஆய்வுப் பணிகள் மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்படுகிறது என்றும், மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி, இலக்கு மக்களுக்கு சரியானபடி போய் சேருகிறது என்றும், இதற்கு முழு காரணமான தமிழக அரசையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் வெகுவாக பாராட்டி நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

மேற்கொள்ளப்படுகிறது என்பது குறித்தும், ஏழைகள், மிகவும் ஏழைகள், நலிவுற்றோர், மாற்றுத் திறனாளிகள், ஆதரவற்றோர் தேர்ந்தெடுக்கப்படும் முறை, அவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் குறித்த விபரங்கள் மற்றும் இளைஞர்களுக்கு எவ்வாறு தொழிற்பயிற்சி வழங்கப்படு கிறது போன்றவை குறித்து ஒவ்வொரு மாநிலத்தின் மூலம் கண்டறியப்பட்ட உண்மை விவரங்கள் குறித்தும் கருத்தரங்கு

18 மாநில முதன்மைச் செயல் அலுவலர் களும் தமிழகத்தில் மக்கள் நிலை ஆய்வுப் பணிகள் மிகச் சிறப்பாக மேற் கொள்ளப்படுகிறது என்றும், மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி, இலக்கு மக்களுக்கு சரியானபடி போய் சேருகிறது என்றும், இதற்கு முழு காரணமான தமிழக அரசையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் வெகுவாக பாராட்டி நன்றி தெரிவித்துக் கொண்டனர். ■

பகுதி - 6

காப்பீடு

இன்றைய அவசியத் தேவை

கடந்த இதழ்களில் காப்பீடு குறித்த பல விபரங்களை அறிந்து கொண்டோம். இந்த இதழில் வாகன காப்பீடு குறித்த விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

மோட்டார் வாகன காப்பீடு

இன்று அனைத்து வகையான வாகனங்களுக்கும் காப்பீடு அவசியம் தேவையாக இருக்கிறது. வாகனத் திற்கு அல்லது அதனுடைய பாகங்களுக்கு ஏற்படுகின்ற அனைத்து சேதாரங்கள் அல்லது நட்டங்களுக்கு எதிரான தொகையினை வாகனக் காப்பீடு அளிக்கிறது. இயற்கை சீற்றங்களான தீ மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாகவோ அல்லது திருடு மற்றும் கலவரத் தின் காரணமாகவோ வாகனங்களுக்கு நட்டம் அல்லது சேதாரம் எற்படலாம். விபத்து சேதாரத்தின் காரண மாக எழுகின்ற மூன்றாம் நபருக்கான சட்டப்படியான பொறுப்புகளிலிருந்தும் வாகன காப்பீடு நம்மைப் பாதுகாக்கிறது.

கோராமல் இருந்ததற்கான போனஸ் (என். சி. பீ.)

காப்பீட்டுத் தொகை கோராமல் இருக்கும் போது அதற்கான போனஸ் என்பது குறிப்பிட்ட வருடத்திற்காக காப்பீட்டுத் தொகையினை பாலிசிதாரர்கள் கோராமல் இருக்கும்போது பாலிசிதாரர்களுக்கு சலுகை அளிக்கப்படுவதாகும். பாலிசி புதுப்பிக்கும் நேரத்தில் அந்த காப்பீட்டுத் தொகை கோராமல் இருந்ததற்கான போனசுக்கு ஒரு பாலிசிதாரர் தகுதியாகிறார். உங்கள் முன்னாள் வாகன காப்பீட்டை அளிப்பவரிடமிருந்து நீங்கள் என்.சி.பீ.க்கு தகுதியானவர் என்பதை காட்ட உங்களால் இயலும் என்ற நேரத்தில் என்.சி.பீ. அளவு தொடர்ந்து ஒரே விதமாக இருக்கும்.

உயிருக்கு அல்லது பொருளுக்கான அனைத்து நட்டங்கள் அல்லது சேதாரங்கள் அது தனக்கோ அல்லது மூன்றாம் நபருக்கோ ஏற்பட்டாலும் அது குறித்த விபரங்களை உரிய அதிகார எல்லையை கொண்டிருக்கும் காவல் நிலையத்தில் பாலிசிதாரர் தெரியப்படுத்த வேண்டும். காப்பீடு நிறுவனம் பணமில்லா வசதியினை அளித்தால், வாகனங்களை பழுது பார்த்தலுக்காக நீங்கள் செலவிடும் தொகையை ரொக்கமாக செலுத்த வேண்டியதில்லை. எனினும், காப்பீடு நிறுவனங்கள் சில விநியோகிப்பாளர்களோடு மட்டும் ஒப்பந்தம் செய்திருக்கும். எனவே காப்பீடு நிறுவனங்கள் குறிப்பிடும் விநியோகஸ்தர்களிடமே நீங்கள் உங்கள் வாகனத்தினை பழுது பார்த்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் வாகனம் திருடு போய் விட்டால், முதல் வேலையாக உரிய அதிகார எல்லையைக் கொண்டிருக்கும் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கையை முறையாகப் பதிவு செய்து, அதற்குரிய சான்றினைப் பெற்று வைத்துக் கொள்ள வேண்டும். ■

இங்கிலீஷ்ல பேசலாம் ஈஸியா...

2000 ஆங்கில வார்த்தைகள் தெரிந்து கொள்வோம்

பகுதி - 7

உடல் உறுப்புகள்	Parts of Body
தலை	Head
தலைமுடி	Hair
நெற்றி	Forehead
நெற்றிப்பொட்டு	Temples
மூக்கு	Nose
நாசிகள்	Nostrils
கண் புருவங்கள்	Eye brows
கண் இமைகள்	Eye lids
கண் இமை முடி	Eye lashes
கண் விழிகள்	Eye balls

உறவுமுறை	Relation
மாமனார்	Father-in-law
மாமியார்	Mother-in-law
மருமகன்	Son-in-law
மருமகள்	Daughter-in-law
முறைப்பையன்	Nephew
முறைப்பெண்	Niece
மைத்துனி	Sister-in-law
மைத்துனன்	Brother-in-law
தத்துப்பிள்ளை	Adopted Son
தத்துப்பெண்	Adopted Daughter

காட்டு விலங்குகள்	Wild Animals
கரடி	Bear
யானை	Elephant
குள்ளநரி	Fox
பெருநரி	Jackal
சிங்கம்	Lion
சிறுத்தை	Leopard
குரங்கு	Monkey
முள்ளம்பன்றி	Porcupine
முயல்	Rabbit
புலி	Tiger

(தொடரும்)

மூத்தக் குடிமக்களை பாதுகாப்போம்

மூத்தக் குடிமக்கள் பராமரிப்பு நலச்சட்டம் 2007

பிள்ளைகள் இல்லாத மூத்த குடிமக்கள் தனது சொத்தை அனுபவித்துக் கொண்டிருப்பவர் அல்லது தனது காலத்திற்குப் பிறகு தனது சொத்தை அடைய இருப்பவர் ஆகியோர் மீதும் பராமரிப்புத் தொகை கோரி மனு செய்யலாம்.

பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களுக்கு தேவைப்படும் பராமரிப்பு மற்றும் அவர்களின் நலவாழ்விற்காக பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச்சட்டம், 2007 இயற்றப்பட்டு, அதற்கிணங்க தமிழ்நாடு பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு விதிகள், 2009 வகுக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் தங்களை பராமரித்துக் கொள்ளப் போதுமான பொருளாதார வசதி இல்லாத நிலையிலும் மற்றும் சொத்துக்கள் எதுவும் இல்லாத பொழுதும், உரிய பராமரிப்பு கிடைக்கவில்லையெனில் இச்சட்டத்தின் கீழ் அவர்களின் மகன்கள், மகள்கள், பேரன்கள், பேத்திகள் ஆகியோரிடமிருந்து பராமரிப்புத் தொகை பெறலாம்.

பெற்றெடுத்த தாய் தந்தை மட்டுமல்லாது மாற்றாந்தாய் – தந்தை, வளர்ப்புத் தாய் – தந்தை ஆகியோரும் இச்சட்டத்தின் கீழ் பராமரிப்புத் தொகை கோரலாம். பிள்ளைகள் இல்லாத மூத்த குடிமக்கள் தனது சொத்தை அனுபவித்துக் கொண்டிருப்பவர் அல்லது தனது காலத்திற்குப் பிறகு தனது சொத்தை அடைய இருப்பவர் ஆகியோர் மீதும் பராமரிப்புத் தொகை கோரி மனு செய்யலாம்.

இச்சட்டத்தின் கீழ் யாரிடம் மனு செய்தல் வேண்டும்?

இச்சட்டத்தின் கீழ் பராமரிப்பு உதவித் தொகை வேண்டி நீதி மன்றத்திற்குச் செல்ல வேண்டியது இல்லை. கோட்டாட்சியர் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள தீர்ப்பாயத்தில் மனு வினை தாக்கல் செய்யலாம். இதற்கென தீர்ப்பாயங்கள் உட்கோட்ட அளவில் அமைக்கப்பட்டுள்ளன. இத்தீர்ப்பாயங்கள் ஓர் உரிமையியல் நீதிமன்றத்திற்கு உள்ள அனைத்து அதிகாரங்களையும் பெற்றிருக்கின்றன.

மூத்த குடிமக்களை ஆதரவற்ற நிலையில் விட்டுச் சென்றால், அம்மூத்தக் குடிமக்களை பராமரிக்கத் தவறியவர்களுக்கு மூன்று மாத சிறைத்தண்டனை அல்லது ரூ. 5,000/– அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்து தண்டனையாக வழங்கப்படும்.

இச்சட்டத்தின் கீழ் எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும்?

பெற்றோர்களோ அல்லது மூத்தக் குடிமக்களோ தங்கள் இயலாமையின் காரணமாக நேரடியாகச் சென்று தீர்ப்பாயத்தில் மனு தாக்கல் செய்ய இயலவில்லை என்றால் தங்களுக்கு பதிலாக வேறொருவரையோ அல்லது ஒரு தொண்டு நிறுவனத்தின் மூலமாகவோ மனு தாக்கல் செய்யலாம்.

இச்சட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவிகள்

இச்சட்டத்தின் கீழ் பெற்றோர்களுக்கு தீர்ப்பாயத்தால் வாழ்க்கைப் பொருளுதவிக்கு வகை செய்யும் ஆணைகளின் பேரில் தேவையான உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதி மற்றும் சிகிச்சை அளிப்பதற்காக மாதம் ரூ. 10,000/–த்திற்கு மிகாத வகையில் பாரமரிப்புத் தொகை பெற்றுத் தர வழிவகை செய்யப்படும்.

பராமரிப்புத் தொகை வழங்கப்படாத பட்சத்தில் வழங்கப்படும் தண்டனைகள்

தீர்ப்பாயத்தினால் பிறப்பிக்கப்பட்ட ஆணைக்கிணங்க பிள்ளைகளோ அல்லது உறவினர்களோ தகுந்த காரணமின்றி செயல்படவில்லை எனில் ஒரு மாதத்திற்கான சிறைத் தண்டனையோ அல்லது பணம் செலுத்தும் வகையில் சிறைத் தண்டனையோ எது அதிகமோ அந்தக் காலம் வரை தண்டனை வழங்கப்படும். ■

செப்டம்பர் 5 – விழுப்புரம்

குறும்படங்கள் வெளியீடு

விழுப்புரம், மயிலம் பொறியியல் கல்லூரியில் 05.09.2013 அன்று நடைபெற்ற கல்லூரி சந்தை துவக்க விழா நிகழ்ச்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் குறித்து மயிலம் பொறியியல் கல்லூரி மாணவர்கள் தாங்களே எழுதி, இயக்கி, நடித்த 'இருளின் விடியல் மற்றும் இன்றைய மகளிர் சமுதாயம் ஒரு சிறப்பு பார்வை' என்ற இரண்டு குறும்பட குறுந்தகடுகளை ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. முத்து மீனாள் வெளியிட, முதல் பிரதியை மயிலம் ஒன்றியக்குழு பெருந்தலைவர் திரு இராமமூர்த்தி பெற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் மயிலம் பொறியியல் கல்லூரி முதல்வர் திரு செந்தில், மகளிர் திட்ட அலுவலர் (பொ) எஸ். சுந்தர்ராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர். இக்கல்லூரி சந்தையில் ரூ. 1,34,932/– மதிப்பிலான மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.■

செப்டம்பர் 7 – திண்டுக்கல்

பிளாஸ்டிக் மறு சுழற்சி மையம்

திண்டுக்கல், சாணார்பட்டி வட்டாரம், டி.பஞ்சம்பட்டி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ள விரலிப்பட்டி ஆரோக்கிய மாதா மகளிர் குழுவின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள பிளாஸ்டிக் மறுசுழற்சி மையத்தினை திண்டுக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. எம். எஸ். பாண்டியராஜன் அவர்கள் திறந்து வைத்தார். இவ்விழாவில் மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் (பொ) திருமதி. பெ. திலகவதி மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்த பிளாஸ்டிக் மறு சுழற்சி மையத்தில் மறுசுழற்சி செய்யப்படும் பிளாஸ்டிக் கழிவுகள், பிளாஸ்டிக் குழாய்கள் மற்றும் பொருட்கள் தயாரித்திட தேவையான மூலப்பொருட்களாக உருமாற்றம் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. ■

செப்டம்பர் 10 – காஞ்சிபுரம்

உலக எழுத்தறிவு தினக் கொண்டாட்டம்

பல்லாவரம் இந்தியன் வங்கி சுய உதவிக் குழு கடன் சிறப்பு கிளையில் 10.09.2013 அன்று நடைபெற்ற 'உலக எழுத்தறிவு தின' விழாவில் இந்தியன் வங்கி சென்னை மண்டலம் (தெற்கு) மண்டல மேலாளர் / பொதுமேலாளர் திரு. ஜி. ரங்கராஜன் அவர்கள் தலைமை வகித்து சிறப்புரையாற்றினார். திரு. சீ.கை.செல்வம், செயலர், அறிவொளி இயக்கம்/காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்கு) மற்றும் திரு. கதிரேசன், மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர், அறிவொளி இயக்கம் ஆகியோர் உட்பட பலர் விழாவில் கலந்து கொண்டனர். எழுதப் படிக்கத் தெரியாத மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களில் முதற்கட்டமாக 200 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு எழுதப் படிக்க மற்றும் கையொப்பமிட பயிற்றுவிக்கப்பட்டது. எழுதப் படிக்க கற்றுக் கொண்டவர்கள், இந்த விழாவில் அனைவரின் முன்னிலையிலும் கையொப்பமிட்டனர். ■

திருநெல்வேலி

ஒப்பந்தப் பணியில் கூட்டமைப்பு

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டாரத்தில் செயல்பட்டு வரும் பரமேஸ்வரபுரம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினர், கூடங்குளம் அணுமின் நிலைய திட்ட இயக்குநரை சந்தித்து, தங்களுக்கு ஏதாவது ஒப்பந்த பணியினை வழங்க வேண்டும் என்று விண்ணப்பித்தனர். இவர்களின் விண்ணப்பத்தினை ஏற்று கூடங்குளம் பயிற்சி மையத்தில் ஒரு ஆண்டிற்கு ஹவுஸ்கீப்பிங் பணியினை செய்யும் ஒப்பந்தத்தினை வழங்கியதுடன், இப்பணியை சிறப்பாக செய்தால் மீண்டும் ஒப்பந்தம் செய்து பணி வழங்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. கூட்டமைப்பின் நிர்வாகிகள் இந்திரா மற்றும் கார்த்திகா தலைமையில் 7 உறுப்பினர்கள் வேலை வாய்ப்பு பெற்று ஹவுஸ் கீப்பிங் பணியினை செய்து வருகின்றனர். ■

நாகப்பட்டினம்

கல்லூரி சந்தை

நாகப்பட்டினம்மாவட்டம்,ஏ.டி.எம்.மகளிர்கலைக்கல்லூரியில் மகளிர் சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சியினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு து. முனுசாமி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்கள். மாவட்ட மகளிர் திட்ட அலுவலர், கல்லூரி முதல்வர், உதவித் திட்ட அலுவலர்கள், கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் மாணவிகள் இக்கண்காட்சி திறப்பு விழாவில் கலந்த கொண்டனர். இக்கண்காட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்த பிரம்பு பொருட்கள், பனை ஓலைப் பொருட்கள், தேங்காய் சிரட்டை பொருட்கள், மண் பொம்மைகள், அலங்காரப் பொருட்கள், செயற்கை ஆபரணங்கள் மற்றும் உணவுப் பொருட்கள் போன்றவை விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. ■

செப்டம்பர் 18 – கிருஷ்ணகிரி

கல்லூரி சந்தை

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செயல்படும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பாக, கிருஷ்ணகிரி அரசு ஆடவர் கலைக் கல்லூரியில் 18.09.2013 அன்று கல்லூரி சந்தையை மாவட்ட ஆட்சியர் திரு டி.பி.ராஜேஷ், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் வாழ்வாதார திட்ட இயக்குநர் திரு கோ. இராமையா, புதுவாழ்வு திட்ட மேலாளர், கல்லூரி முதல்வர், உதவி திட்ட அலுவலர்கள், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க மேலாளர், கல்லூரி பேராசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். இக்கல்லூரி சந்தையில் 20 மகளிர் சுய உதவிக் குழுவினர் பங்கேற்று தங்கள் உற்பத்திப் பொருட்களை ரூபாய் 1,25,233/-க்கு விற்பனை செய்தனர்.■

கன்னியாகுமரி மாவட்டம்

கிராம சபையில் காட்சியரங்கம்

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் திரு எஸ். நாகராஜன், இ.ஆ.ப., மற்றும் திட்ட இயக்குநர் திரு பொ. தேவதாஸ் பொன்னையா ஆகியோர் அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம் குலசேகரபுரம் ஊராட்சியில் அக்டோபர் 2ல் நடைபெற்ற கிராம சபையில் IEC தொடர்பான காட்சியரங்கம் (kiosk) அமைத்து, அதில் துண்டு பிரசுரங்கள் வழங்கி, கழிப்பறை கட்ட அறிவுறுத்தினர். ■

சென்னை

விவசாய வளர்ச்சி நிதியத்தின் (ADFT) செயல்பாடுகள்

விவசாயம் மற்றும் அது சார்ந்த தொழில்களின் வளர்ச்சிக்கு பல்வேறு வகையிலும் உதவி புரிந்து வரும் தமிழ்நாடு விவசாய வளர்ச்சி நிதியத்தின் செயல்பாடுகளால் இன்று தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் விவசாயம் மற்றும் அது சார்ந்த தொழில்கள் சிறப்பான வளர்ச்சியினைப் பெற்றுள்ளன. நபார்டு வங்கியின் உதவியுடன் செயல்பட்டு வரும் இந்த நிதியம், சுய உதவிக் குழுக்கள், கூட்டமைப்புகள் ஆகியவற்றுக்கு பல்வேறு வகையான நிதி உதவி வழங்கி, அவைகளின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரிதும் உதவி வருகிறது.

நாகை, திருநெல்வேலி, இராமநாதபுரம், காஞ்சிபுரம், தேனி, நாமக்கல், சேலம், தூத்துக்குடி மற்றும் கோவை ஆகிய மாவட்டங்களில் செயல்படும் புதுவாழ்வுத் திட்டத்தின் கீழ் உள்ள தகுதி வாய்ந்த 78 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ. 2106.38 இலட்சம் கடன் வழங்கி உள்ளது.

இக்கடன் தொகையை பெற்ற 78 கூட்டமைப்புகளும் பால் மற்றும் பால் பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், தங்களின் உறுப்பினர் குழுக்களுக்கு 8287 கால்நடைகளை வாங்க கடனாக வழங்கியுள்ளன. ■

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

IFAD
Enabling poor rural people to overcome poverty

வருடாந்திர உள்நோக்குதல்

Annual Retreat

ஒவ்வொரு ஆண்டும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டப் பணிகளில் ஈடுபட்டுள்ள அனைத்து பங்குதாரர்களின் (Stock Holders) அனுபவங்களைக் பகிர்ந்து கொள்ள ஏதுவாக உள்நோக்குதல் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. கடந்த 2011–12ஆம் ஆண்டில் உள்நோக்குதல் கூட்டம் கன்னியாகுமரியில் நடைபெற்றது.

2012–13ஆம் ஆண்டிற்கான கூட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரத்தில் கடந்த 12.09.2013 மற்றும் 13.09.2013 ஆகிய தேதிகளில் சிறப்புற நடைபெற்றது. நிகழ்ச்சிகளில் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்ட முதன்மைச் செயலர் / திட்ட இயக்குநர் திரு விக்ரம் கபூர், இ.ஆ.ப., அவர்கள், அலுவலர்கள், கூட்டு வள மையப் பணியாளர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் பிரதி நிதிகள், அரசு சாரா அமைப்புகள் மற்றும் திட்ட பயனாளிகள் கலந்து கொண்டனர்.

முதல் நாள் நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக அனைத்து பங்கேற்பாளர்களும், ஐந்து குழுக்களாகப் பிரிந்து, ஒவ்வொரு குழுவும் ஒரு திட்டச் செயல்பாடுகள் குறித்து கள ஆய்வு மேற்கொண்டனர்.

முதல் குழு சுய உதவிக் குழுக்களுக்கான கடன் இணைப்பு குறித்தும், இரண்டாவது குழு குறுந்தொழில் மேம்பாடு பற்றியும், மூன்றாவது குழு காப்பீடு திட்டம் தொடர்பாகவும், நான்காவது குழு தொழில் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு குறித்தும், ஐந்தாவது குழு இருளர் மக்களின் வாழ்வாதார மேம்பாடு தொடர்பாகவும் ஆய்வுகள் மேற்கொண்டனர். பின்னர் தாங்கள் கண்டறிந்ததை விளக்கப் படங்கள் மூலம் பார்வையாளர்களுக்கு எடுத்துரைத்தனர்.

இரண்டாம் நாள் நடைபெற்ற நிகழ்ச்சியில், திட்ட செயல் பாடுகளின் முன்னேற்றம் குறித்தும், அவற்றின் மூலம் புரிந்து கொள்ளப்பட்ட பாடங்கள் குறித்தும் கூடுதல் திட்ட இயக்குநர் திரு கிளாட்ஸ்டன் புஷ்பராஜ் அவர்களால் விரிவாக விளக்கப்பட்டது. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், அவற்றின் செயல்பாடுகள், வங்கிகளின் வணிகத் தொடர்பாளர்களாக கூட்டமைப்புகள் செயல்படும் விதம் போன்றவை குறித்த பல்வேறு விபரங்கள் முதுநிலை ஊரக நிதி மேலாளர் திரு லஷ்மி நாராயணன் அவர்களால் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

குறுந்தொழில் மேம்பாட்டில் தாம் பெற்ற அனுபவங்கள் குறித்து, நிறுவன வளர்ச்சி மேலாளர் திரு கனிங்ஸ்டன் பங்கேற்பாளர்களுடன் பகிர்ந்து கொண்டார். காப்பீடு திட்டங்களால் கிடைக்கும் பயன்கள் குறித்தும், துயர் குறைப்பு நிதி குறித்தும் திரு செந்தில்குமார், மதிப்பீட்டு அலுவலர் அவர்களால் விளக்கப்பட்டது.

மேலும் நிதி கையாளுதல், கணக்குகள் சரியாக பராமரித்தல் மற்றும் நிதி அறிக்கைகள் அனுப்புதல் ஆகியவை தொடர்பாக நிதி மேலாளர் திரு சுந்தரராஜன் அவர்களாலும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் பொருளாதார மேம்பாடு குறித்து திரு முருகப்பெருமாள், சேவாலயா, நாகப்பட்டினம் அவர்களாலும் படத்தொகுப்புகள் மூலம் விளக்கப்பட்டது.

இந்த உள்நோக்குக் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து தரப்பினரிடமும், திட்ட செயல்பாடுகளில் காணப்படும் நிறை, குறைகள் குறித்தும் கருத்துக்கள் கேட்டு அறியப்பட்டது. 2013–14ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட வேண்டிய திட்ட செயல்பாடுகள் குறித்து மாவட்ட செயலாக்க அலுவலர்களுக்கு பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டது. இறுதியாக நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது. ■

முதல் நாள் நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக அனைத்து பங்கேற்பாளர்களும், ஐந்து குழுக்களாகப் பிரிந்து, ஒவ்வொரு குழுவும் ஒரு திட்டச் செயல்பாடுகள் குறித்து கள ஆய்வு மேற்கொண்டனர்.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு கணினிகள்

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டப் பகுதிகளில் உள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு கணினி அறிவை புகட்டவும், அதன் மூலம் கூட்டமைப்புகளின் கணக்கு வழக்குகளை இலகுவாக தங்கள் தாய்மொழியான தமிழிலேயே பராமரித்திடவும் வேண்டி M/s Tally நிறுவனம் மூலம் ஒரு மென்பொருள் (ERP 9) தயாரிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக திருவள்ளூர் மாவட்டத்தில், 14 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு கணினி, பிரிண்டர், மின் சேமிப்பு கருவி (UPS) மற்றும் பிற தளவாடச் சாமான்கள் வழங்கப்பட்டு, கணினிகளில் Tally ERP 9 மென்பொருள் பதிவேற்றப்பட்டுள்ளது. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் கணக்கு பராமரிப்பாளர்களுக்கு (Book Keepers) கணினி பயன்பாடு மற்றும் Tally மென்பொருள் தொடர்புடைய பயிற்சிகள் திருவள்ளூர் மாவட்ட செயலாக்க அலுவலகத்தில் வழங்கப்பட்டன.

பயிற்சி பெற்ற அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் கணக்கு பராமரிப்பாளர்களும் தங்கள் கூட்டமைப்பு களைச் சார்ந்த சுய உதவிக் குழுக்களின் கணக்குகளை தத்தம் கணினியில் பதிவுகள் மேற் கொண்டு வருகின்றனர்.

கணினிப் பயிற்சி குறித்து திருமதி அமலா (கோட்டை குப்பம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் கணக்கு பராமரிப்பாளர்) கூறும்போது

'என் பெயர் அமலா, நான் திருவள்ளூர் மாவட்ட கோட்டை குப்பம் கிராமத்தில் வசித்து வருகிறேன். எங்கள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் எங்கள் வரவு செலவுகளை கணக்கு புத்தகத்தில் எழுதி வந்தோம். அதில் பல தவறுகளுடன் பராமரிப்பதிலும் சிரமங்கள் இருந்தன். தற்போது எங்கள் கூட்டமைப்புக்கு கணினி மற்றும் இதர தளவாடச் சாமான்கள் வழங்கி அவற்றை பயன்படுத்தத் தேவையான



▶▶▶ திருமதி. அமலா கணினியில்...

பயிற்சியும் வழங்கப்பட்டது. மேலும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் Tally மென்பொருள் பதிவேற்றப்பட்டுள்ளதால், எங்களால் எளிதில் புரிந்து கொள்ள முடிகிறது.

நாங்கள் இதுவரை தூரத்தில் இருந்து மட்டுமே கணினியை பார்த்துள்ளோம். இப்போது எங்கள் கணக்குகளை நாங்களே கணினியில் பராமரிப்பதன் மூலம் கணினி குறித்த மர்மம் விலகி விட்டது. இனி எங்களின் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை சிறப்பாக செயல்படச் செய்து, நாங்கள் சிறந்து விளங்குவோம் என்று உறுதியளிக்கிறோம்." என்றார். ■

கடலோரப் பகுதிகளில் குறுந்தொழில் மேம்பாடு - மாநில அளவிலான கருத்துப் பட்டறை

2013–14ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு நிதிநிலை அறிக்கையின் போது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள், சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் 100 குறுந்தொழில்கள் ஏற்படுத்தப்படும் என அறிவித்தார். இக்குறுந்தொழில்கள் அனைத்தும், NABFINS வங்கியுடன் இணைந்து திட்டப் பகுதிகளில் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான செயல் திட்டம் வகுக்க, கடந்த 14.09.2013 அன்று மாமல்லபுரத்தில் மாநில அளவிலான கருத்துப்பட்டறை நடைபெற்றது. இதில் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்ட கூடுதல் இயக்குநர், முதுநிலை ஊரக நிதி மேலாளர், நிறுவன வளர்ச்சி மேலாளர் மற்றும் அனைத்து மாவட்ட அலுவலர்களும் NABFINS வங்கியின் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதார திட்டத்தின் கூடுதல் இயக்குநர் திரு கிளாட்ஸ்டன் புஷ்பராஜ் அவர்கள், சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதார திட்டத்திலிருந்து மூன்று கோடி ரூபாய் NABFINS நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி, 300 குறுந்தொழில்கள் இந்த ஆண்டே தொடங்க வேண்டும் என கேட்டுக் கொண்டார். ஏற்கனவே துவங்கப்பட்ட குறுந்தொழில்கள் சரிவர செயல்படாதவற்றில் என்னென்ன பிரச்சனைகள் உள்ளன, மேலும் இதுபோன்ற பிரச்சனைகள் புதிதாக துவங்கவிருக்கும் 300 குறுந்தொழில்களில் ஏற்படாமல் இருக்க என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என விவாதிக்கப்பட்டது.

குறுந்தொழில்கள் துவங்குவதற்கு ஏதுவாக கருத்துருக்கள் தயார் செய்வது குறித்தும், அவற்றில் கவனிக்க வேண்டிய முக்கியமான அம்சங்கள் பற்றியும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. NABFINS வங்கியின் கடன் கொள்கைகள் பற்றியும், கடன்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள வட்டி விகிதங்கள் பற்றியும், உற்பத்தி செய்யப்படும் பொருள்களை சந்தைப்படுத்துதல் பற்றியும் NABFINS வங்கி அதிகாரிகளால் விரிவாக விளக்கப்பட்டது. மாவட்ட செயலாக்க அலுவலர்கள் எழுப்பிய ஐயங்களுக்கு பதில் அளிக்கப்பட்டது.

மேலும் பயனாளிகளை தேர்வு செய்யவும், அவர்களிடம் கடன் குறித்த விளக்கங்கள் நேரடியாக அளிக்கவும், 21.10.2013 துவங்கி அனைத்து மாவட்டங்களிலும் கருத்துப் பட்டறைகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. டிசம்பர் 2013க்குள் 100 குறுந்தொழில்களும் ஏற்படுத்த அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றது. ■

ஆங்கோர் ஏழைக்கு வாழ்வாதாரம்.... ஒரு ஆனந்தக் கண்ணீர் கதை...

என் பெயர் ஆனந்த இக்பர். நான் நாகப்பட்டினம் மாவட்டம், தென்னாம்பட்டினம் ஊராட்சியில் வசித்து வருகிறேன். 12ஆம் வகுப்பு வரை படித்துள்ள நான் 4 நாட்கள் தமிழ்நாடு உழவர் பயிற்சி மையம், திருவாரூரில் வெண்பன்றி வளர்ப்பு தொழில் குறித்த பயிற்சி பெற்றுள்ளேன். பயிற்சி முடிந்ததும் வெண்பன்றி வளர்ப்பு தொழில் செய்யும் ஆர்வத்தோடு நான் பல தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளை நாடினேன். அனைத்து வங்கிகளும், சொத்து ஏதாவது இருப்பின் அதை கடனுக்கு பணயமாக (Surety) கொடுத்தால் மட்டுமே கடன் தருவோம் என்று தெரிவித்தனர்.

நானோ வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள ஓர் பரம ஏழை. எனக்கு எந்த சொத்தும் கிடையாது. எனவே எந்த வங்கியிலும் கடன் பெற முடியாமல் மன வேதனையில் இருந்தேன்.

என் சகோதரி மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக இருக்கிறார். அவர், சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மூலம் தொழில் செய்வதற்கு வட்டியில்லா கடன் வழங்குவதாகத் தெரிவித்தார். நானும் சம்பந்தப்பட்ட கூட்டு வள மையத்தின் ஆலோசனையின் பேரில், மாவட்ட செயலாக்க அலுவலகம்மூலம்திட்டக்கருத்துரு ஒன்றைதயார்செய்து சென்னை திட்ட மேலாண்மை அலகிற்கு அனுப்பினேன். அந்த கருத்துருவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு எனக்கு ரூபாய் 2,98,200/– வட்டியில்லா கடனாக வழங்க அனுமதி அளித்தார்கள். பின்னர் நான் எனது பங்களிப்பாக ரூபாய் 33,300/– செலுத்தினேன். மொத்தம் 3,31,700/– ரூபாயை மூலதனமாக வைத்து, 14.10.2012 அன்று 6 பெண் பன்றிகளும் 2 ஆண் பன்றிகளும் வாங்கி வளர்க்கத் தொடங்கினேன்.

ஒரு வருடத்திற்குப் பிறகு 6 பெண் பன்றிகளும் 48 குட்டிகளை ஈன்றன. அவற்றில் 6 வெண் பன்றிகளை ரூ. 56,000/–க்கு விற்பனை செய்தேன். அதன் மூலம் ரூ. 30,000/– கடனை திரும்பச் செலுத்தியுள்ளேன். பன்றி இறைச்சி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் அதன் சந்தை வாய்ப்பு அதிகமாகவே உள்ளது. அதனால் அவற்றை சந்தைப்படுத்துவதில் எனக்கு எந்த பிரச்சனையும் இல்லை. IFAD Assisted PTSLP அலுவலர்களின்

தொடர் கண்காணிப்பிலும், அறிவுரையிலும் நான் தொழிலை திறமையாக நடத்தி வருகிறேன்.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் மட்டும் எனக்கு எந்த பிணையமும், வட்டியும் இல்லாமல் கடன் தராமல் இருந்திருந்தால் இப்போது செய்து வரும் தொழிலைப் பற்றி என் வாழ்வில் நினைத்துப் பார்த்திருக்க முடியாது. என் வாழ்நாள் முழுக்க ஒரு கூலியாகவே உழைத்து ஓடாகத் தேய்ந்து செத்து இருப்பேன். சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் எனக்கு ஒரு புதுவாழ்வை அளித்து, நான் ஒரு சுய மரியாதையுள்ள மனிதனாக மாறி இருக்கிறேன். இதை நினைக்கும் போது என் கண்ணில் நீர் பெருகாத தருணமே இல்லை. ■

என் சகோதரி மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக இருக்கிறார். அவர், சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மூலம் தொழில் செய்வதற்கு வட்டியில்லா கடன் வழங்குவதாகத் தெரிவித்தார். நானும் சம்பந்தப்பட்ட கூட்டு வள மையத்தின் ஆலோசனையின் பேரில், மாவட்ட செயலாக்க அலுவலகம் மூலம் திட்டக் கருத்துரு ஒன்றை தயார் செய்து சென்னை திட்ட மேலாண்மை அலகிற்கு அனுப்பினேன். இந்த கருத்துருவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு எனக்கு ரூபாய் 2,98,200/– வட்டியில்லா கடனாக வழங்க அனுமதி அளித்தார்கள். பின்னர் நான் எனது பங்களிப்பாக ரூபாய் 33,300/– செலுத்தினேன். மொத்தம் 3,31,700/– ரூபாயை மூலதனமாக வைத்து, 14.10.2012 அன்று 6 பெண் பன்றிகளும் 2 ஆண் பன்றிகளும் வாங்கி வளர்க்கத் தொடங்கினேன்.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்ட விற்பனை அரங்கிற்கு பாராட்டு சான்றிதழ்

மகளிர் மேளா 2013 'நவராத்திரி' கண்காட்சி என்னும் கருப்பொருளுடன் 26.09.2013 முதல் 17.10.2013 வரை சென்னை, நுங்கம்பாக்கம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலையில் உள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்ற நவராத்திரி விற்பனைக் கண்காட்சியில் விற்பனை அரங்குகளை அமைத்திருந்த அனைத்து குழுக்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கும் விழா 15.10.2013 அன்று சென்னை அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில், நவராத்திரி விற்பனைக் கண்காட்சியில் விற்பனை அரங்குகள் அமைத்திருந்த பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் (IFAD) கீழ் செயல்படும் சுய உதவிக் குழுக்களுக்கு ஊக்கமளிக்கும் வண்ணம் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு கே.பி. முனுசாமி அவர்கள், சான்றிதழை வழங்கி அக்குழுவினருக்குப் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டார். ■

திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப.,
முதன்மை செயலாளர் / திட்ட இயக்குநர்,

திரு. **A.R.** கிளாஸ்ட்டோன் புஷ்பராஜ்,
கூடுதல் இயக்குநர்

திரு. இரா. இரவிச்சந்திரன்,
தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

மகளிர் மேளா 2013 - நவராத்திரி விற்பனைக் கண்காட்சியில் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டப் பயனாளிகளின் விற்பனை அரங்கு

ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் சுனாமி பாதிப்புக்குள்ளான கடலோரப் பகுதிகளில் வசிக்கும் மக்களின்

இத்திட்டத்தால் கடலோரப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரம் சிறப்பான வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

வாழ்வாதாரம் சிறப்பான வளர்ச்சியைப் பெற்றுள்ளது. அங்குள்ள மக்கள் வளமான வாழ்க்கையை பெற்று வருகின்றனர்.

சென்னை, அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் மகளிர் மேளா 2013 – நவராத்திரி விற்பனைக் கண்காட்சி 26.09.2013 முதல் 17.10.2013 வரை நடைபெற்றது. இக்கண்காட்சியில் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் விற்பனை அரங்கு அமைக்கப்பட்டிருந்தது. இந்த அரங்கில் கடல் சார் பொருட்களான சங்கு, சிப்பி போன்றவற்றில் உருவாக்கப்பட்ட அழகிய கைவினைப் பொருட்கள், துணி வகைகள், உணவுப் பொருட்கள், ஆபரணங்கள் போன்றவை விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்ட முதன்மைச் செயலர் / திட்ட இயக்குநர் திரு விக்ரம் கபூர், இ.ஆ.ப., அவர்கள், மகளிர் மேளா 2013 நவராத்திரி விற்பனைக் கண்காட்சிக்கு வருகை தந்து, கண்காட்சியில் அமைக்கப்பட்டிருந்த சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனை அரங்கினைப் பார்வையிட்டு, அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பொருட்களின் தரம், உற்பத்தி முறை, விற்பனை விபரம் போன்றவை குறித்த விபரங்களை அறிந்து கொண்டதுடன், மேலும் சிறப்பாக செயல்படுவதற்கான ஆலோசனைகளையும் வழங்கினார். ■

முற்றக் கச்சேரி

பகுதி - 8

எவ்வளவு ரூபாய் ஊக்க நிதியா கொடுக்கறாங்க?

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் குறித்து மகளிர் சுய உதவிக் குழுவின் ஊக்குநர் செல்லாயி, உறுப்பினர்கள் வாணி, பார்வதி மற்றும் சிறப்புக்குழு ஒருங்கிணைப்பாளர் சுபா ஆகியோர் விவாதிக்கிறார்கள்.

சுபா: எல்லோரும் வந்தாச்சா?

செல்லாயி: இன்னைக்கு நாம எதைப்பத்தி பேசப்போறோம்...

சுபா: மறுசீரமைக்கப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு நம்ம அரசு கொடுக்கும் ஊக்க நிதி பத்தி பேசலாமா?

பார்வதி : கூட்டமைப்புகளுக்கு நம்ம அரசு ஊக்க நிதி கொடுக்குதா?

சுபா: ஆமாம். நம்ம மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மறுசீரமைக்கப்பட்ட கூட்டமைப்புகள் அத்தனைக்கும் ஊக்க நிதி கொடுக்க உத்தரவு போட்டு இருக்காங்க.

பார்வதி: எவ்வளவு ரூபாய் ஊக்க நிதியா கொடுக்கப் போறாங்க?

சுபா: தர மதிப்பீடு செஞ்ச கூட்டமைப்புகள் ஒவ்வொன்னுக்கும் தலா ஒரு இலட்சம் ஊக்க நிதியா கொடுக்கறாங்க...

பார்வதி: தர மதிப்பீடு செஞ்ச கூட்டமைப்புன்ன என்ன?

சுபா: சிறப்பான செயல்பாடுகள் மற்றும் பதிவேடு பராமரிப்பு போன்றவற்றை சரியான முறையில் செய்யற கூட்டமைப்புகளோட செயல்பாட்டினை ஆய்வு செய்து, அதை தர மதிப்பீடு செய்வாங்க.

வாணி: அரசு கொடுக்கும் ஊக்க நிதியை கூட்டமைப்புங்க எதுக்காக பயன்படுத்தும்?

சுபா: இந்த ஊக்க நிதியை கூட்டமைப்புகள் தங்களோட உறுப்பினர் குழுக்களுக்கு உள்கடனா கொடுக்கும். இதனால சுய உதவிக் குழுக்களோட உறுப்பினர்களுக்கு தொழில் செய்யும் வாய்ப்பு கிடைக்குது. இந்த நிதியிலிருந்து கிடைக்கிற வட்டித் தொகையை கூட்டமைப்போட நிர்வாகச் செலவுக்காகவும் பயன்படுத்தலாம்.

வாணி: இதுவரைக்கும் எவ்வளவு கூட்டமைப்புகளுக்கு ஊக்க நிதி கொடுத்திருக்காங்க...

சுபா: இதுவரைக்கும் நம்ம தமிழ்நாட்டுல இருக்கிற 7600 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை மறுசீரமைச்சு அவைகள் ஒவ்வொன்னுக்கும் ஒரு இலட்சம் ரூபாய ஊக்க நிதியா கொடுத்திருக்காங்க.

செல்லாயி: தொடர்ந்து எல்லா கூட்டமைப்புகளுக்கும் ஊக்க நிதி கொடுப்பாங்களா?

சுபா: ஆமாம். இந்த ஆண்டு 4000 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 40 கோடி ரூபாய் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவு போட்டு இருக்காங்க.

வாணி: மகளிர் சுய உதவிக் குழுக்கள் முன்னேற்றம் அடையணுங்கறதுக்காக நம்ம மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் எவ்வளவோ நல்ல திட்டங்களைப் போட்டு இருக்காங்க. அவங்களுக்கு நம்ம சார்பா நன்றி சொல்லணும்.

சுபா: அதுமட்டுமல்ல. மகளிர் சுய உதவிக் குழுக்களோட வளர்ச்சிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தீட்டும் திட்டங்களை செயல்படுத்தும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் புதுவாழ்வு திட்டம் ஆகியவற்றுக்கும் நன்றி சொல்லணும்... சரியா?

வாணி: ரொம்ப சரிதான்... அடுத்த குழுக் கூட்டத்துல மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் புதுவாழ்வு திட்டம் ஆகிவற்றுக்கும் நன்றி சொல்லி தீர்மானம் போட்டுடலாம். சரியா...?

சுபா: ரொம்ப சரி... நான் வரட்டுமா? அடுத்த முறை வேற விஷயம் குறித்து பேசுவோம்.

(சுபா விடைபெற்று செல்ல... செல்லாயி, வாணி மற்றும் பார்வதி ஆகியோர் வீட்டிற்கு செல்கின்றனர்.)

குறுக்கெழுத்துப் போட்டி 9



இடமிருந்து வலம்

1. சணல் பை உற்பத்தி செய்யும் குழு
2. பிளாஸ்டிக்கை தவிர்ப்போம் .... காப்போம்
3. மகளிர் குழுக்களுக்கு.........அட்டை
4. எழுத்தறிவு வழங்கிய...........

வலமிருந்து இடம்

5. தமிழ்நாடு மாநில .... இயக்கம்
6. நீலகிரி மாவட்டத்தின் சிறந்த குழு
7. விற்பனைக்..........
8. சுய உதவிக் குழுக்களுக்கு.........

மேலிருந்து கீழ்

9. செப்டம்பர் 5
10. வளர்ச்சிப் பாதையில்.....
11. கருத்து .... பயிலரங்கம்
12. திருப்பூர் மகளிர் திட்ட அரங்கிற்கு....... பரிசு

கீழிருந்து மேல்

13. தேசிய இரத்த தான தினம்
14. .... ஐக்கிய நாடுகள் சபை
15. உலக ...... ஒழிப்பு தினம்
16. ..... மயமாக்கப்படும் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள்

மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் மட்டுமே இப்போட்டிகளில் கலந்து கொள்ளும் தகுதி பெற்றவர்கள். குறுக்கெழுத்துப் போட்டிக்கான வினாக்களுக்கு உரிய விடைகள் 2013 செப்டம்பர் மற்றும் அக்டோபர் ஆகிய மாதங்களின் முற்றம் இதழில் இடம் பெற்றுள்ள செய்திகளில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

விடைகளை இன்லாண்டு கடிதத்திலோ அல்லது அஞ்சல் உறையிலோ எழுதி, உங்களது குழுவின் பெயர், முழு முகவரி மற்றும் பின்கோடு எண், செல்போன் எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு முற்றம் முகவரிக்கு 10.11.2013க்குள் கிடைக்கும்படி அனுப்பி வைக்க வேண்டும். ■

குறுக்கெழுத்துப் போட்டி 9
முற்றம் மாத இதழ்
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம்,
சென்னை - 600 034.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

புது வாழ்வு திட்டம்

சுய உதவிக் குழு உறுப்பினரான திருமதி பேச்சியம்மாள் என்பவர் தற்போது ஊராட்சி மன்ற தலைவராக தேர்ந்தேடுக்கப்பட்டு சேவை செய்து வருவதை ஆட்சியர் அவர்கள் பாராட்டினார்.

பக்கம்...28

காய்கறிகளுக்கான உரம் இயற்கைக்கு உகந்ததாகவும், பயிரிடப்படும் காய்கறிகள், பழங்களின் வளர்ச்சிக்கு ஊறு விளைவிக்காததாகவும், உள்ளூரில் கிடைக்கப்பதாகவும் இருக்க வேண்டும்.

பக்கம்...30

புதுவாழ்வுத் திட்டம்' என்ற ஒரு திட்டம், உலக வங்கியின் நிதி உதவியுடன் 2005ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இத்திட்டம் தமிழகத்தின் 120 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பக்கம்...32

ஆரோக்கியமான வாழ்க்கைக்கு

உங்கள்வீட்டு கொல்லைப்புறத்தில் உணவு பயிரிடுங்கள்!

ஏழைகள், மிகவும் ஏழைகள், நலிவுற்றோர், ஆதரவற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம் படுத்தவும், சமூகத்தில் அவர்கள் ஒரு உயரிய நிலையினை அடையவும் பல முன்னோடி திட்டங்களைத் தீட்டி, மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்ற எண்ணத்துடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாட்டில் 2005ஆம் ஆண்டு புதுவாழ்வு திட்டம் தோற்றுவிக்கப்பட்டது.

திருநெல்வேலி

நிலையான மற்றும் நீடித்த வாழ்வாதாரம்

புதுவாழ்வு திட்ட செயல்பாடுகள் கள ஆய்வு

திருநெல்வேலிமாவட்டம்,மானூர்ஒன்றியம்,சீதபற்பநல்லூர் ஊராட்சியில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை 18.09.2013 அன்று மாவட்ட ஆட்சியர் திரு சி. சமயமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார். புதுவாழ்வு திட்டத் தின் செயல்பாடுகளை ஆய்வு செய்த ஆட்சியர் அவர்கள், இத்திட்டத்தின் மூலம் தனிநபர் கடன் பெற்று தொழில் செய்து வரும் பயனாளிகளின் தற்போதைய நிலை பற்றிய விபரங்களை கேட்டறிந்ததுடன், தனிநபர் கடனாக தலா ரூபாய் 10 ஆயிரம் பெற்று பெட்டிக்கடை நடத்தி வரும் கற்பக மீனாட்சி, பால் வியாபாரம் செய்து வரும் முத்துலெட்சுமி, இருசக்கர வாகனம் பழுது பார்க்கும் கடை வைத்து நடத்தி வரும் மாரியப்பன் ஆகியவர்களை நேரில் சந்தித்து ஆய்வு செய்தார்.

ஒத்த தொழில் குழுவில் ஆடு வளர்ப்போர் தொழில் குழுவினரிடம் தொழில் குறித்த விபரங்களைக் கேட்டறிந்ததுடன், இளைஞர் திறன் வளர்ப்பு பயிற்சி பெற்றவர்கள் மற்றும் வேலைவாய்ப்பு பெற்ற

புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்த ஆட்சியர் அவர்கள், கிராம வறுமை ஒழிப்பு சங்கம், மக்கள் கற்றல் மையம் போன்றவற்றை பார்வையிட்டு அவைகள் மேலும் சிறப்பாக செயல்படுவதற்கான ஆலோசனைகளை வழங்கினார்.

உறுப்பினர்களிடமும் பல்வேறு விபரங்களைக் கேட்டறிந் தார். மேலும் சுய உதவிக் குழு உறுப்பினரான திருமதி பேச்சியம்மாள் என்பவர் தற்போது ஊராட்சி மன்ற தலை வராக தேர்ந்தேடுக்கப்பட்டு சேவை செய்து வருவதை ஆட்சியர் அவர்கள் பாராட்டினார். இந்த ஆய்வில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர், புதுவாழ்வு திட்ட மாவட்ட மேலாளர் திரு ச.கி.சம்பத்குமார், உதவித் திட்ட மேலாளர்கள், திட்ட ஒருங்கிணைப்பு அணியினர் மற்றும் புதுவாழ்வு திட்ட கிராம அமைப்புகளின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். ■

நாகப்பட்டினம்

ஐம்பெரும் விழா

நாகப்பட்டினம் மாவட்ட புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் ஐம்பெரும் விழா கடந்த 22.09.2013 அன்று மயிலாடுதுறை ஏ.வி.சி. திருமண அரங்கில் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு து. முனுசாமி, இ.ஆ.ப., அவர்கள் தலைமை யில் நடைபெற்றது. மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு கே. ஏ. ஜெயபால் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, 22 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பெருங்கடன் மற்றும் 315 சுய உதவிக் குழுக்களுக்கு நேரடிக் கடனாக மொத்தம் ரூபாய் 1170.08 இலட்சமும், 4 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு கூடுதல் நிதி யாக ரூபாய் 8.50 இலட்சமும், 7 சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு தனிநபர் அடையாள அட்டையும், தொழில் திறன் பயிற்சி முடித்த 10 இளைஞர்களுக்கு சான்றிதழ்களையும், 6 இளைஞர்களுக்கு ஓட்டுநர் உரிமமும் வழங்கினார்கள்.

> 22 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பெருங்கடன் மற்றும் 315 சுய உதவிக் குழுக்களுக்கு நேரடிக் கடனாக ரூ. 1170.08 இலட்சமும், 4 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு கூடுதல் நிதியாக ரூ. 8.50 இலட்சமும் வழங்கப்பட்டது.

சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் திருமதி ம. சக்தி, வேதாரண்யம் சட்டமன்ற உறுப்பினர் திரு என்.வி. காமராஜ், சார் ஆட்சியர் செல்வி. திவ்யதர்ஷினி, இ.ஆ.ப., மாவட்ட ஊராட்சி தலைவர் திரு ஏ.கே. சந்திரசேகரன், மயிலாடுதுறை ஒன்றிய குழு தலைவர் திரு பா. சந்தோஷ் குமார், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதுநிலை மேலாளர் திரு பி. பத்மகுமார் உட்பட பலர் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். முன்னதாக புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு ஜெய்கணேஷ் வரவேற்புரை ஆற்றினார். ■

சுடோகு

விளையாடுவோம்-6

சென்ற இதழில் வெளியான சுடோகு புதிர் 5க்கு விடை கண்டுபிடித்திருப்பீர்கள். இம்மாதம் வெளியாகியுள்ள சுடோகு புதிர் 6க்கு விடை கண்டுபிடியுங்கள். உங்களின் கணிதத் திறனை வளர்த்துக் கொள்ளுங்கள்.

3					5	8		
	1						4	
8				6				5
	7						3	
5						6		7
	2			3			8	
4	5							8
	6		9					
7					4			3

2013 செப்டம்பர் மாத சுடோகு புதிருக்கு விடை

3	2	8	9	1	5	7	6	4
5	1	9	6	3	7	4	2	8
7	4	6	2	8	9	5	3	1
8	6	2	1	7	4	3	5	9
9	5	7	4	6	3	8	1	2
4	3	1	5	2	8	9	7	6
1	7	3	8	9	2	6	4	5
6	9	5	7	4	1	2	8	3
2	8	4	3	5	6	1	9	7

இலைக் கீரைகள் மற்றும் வேர் காய்களுக்கு வளர்ச்சிக் காலம் முழுவதும் வழக்கமாக நீரூற்ற வேண்டும்.

ஆரோக்கியமான வாழ்க்கைக்கு

உங்கள் வீட்டு கொல்லைப்புறத்தில் உணவு பயிரிடுங்கள்!

வீட்டுத் தோட்டங்கள் அமைத்தபின் கூடுதலாக உள்ள கொல்லைப்புற இடத்தை கோழி வளர்ப்பதற்கும் பயன்படுத்தலாம். 8 முதல் 10 வரையிலான கோழிகளை வளர்ப்பது குடும்பத்தின் முட்டை மற்றும் இறைச்சித் தேவைக்கு போதுமானது. இவ்வாறு கொல்லைப்புறத்தில் ஒரு தோட்டத்தை அமைப்பது ஆரோக்கியமான, ஊட்டச்சத்து மிக்க கீரைகள், பழங்கள் மற்றும் காய்கறிகளை மிகவும் குறைந்தபட்ச முதலீடு மற்றும் முயற்சிகள் மூலம் பெறுவது உறுதி செய்யப்படுகிறது.

புதிய, ஆரோக்கியமான மற்றும் ஊட்டச்சத்து மிகுந்த பழங்கள், காய்கறிகள் மற்றும் கீரைகளை தங்களின் வீட்டு கொல்லைப்புறத்தில் குறைந்த முதலீடு மற்றும் உள்ளீடுகளைப் பயன்படுத்தி பயிரிடலாம்.

சமையலறைக் கழிவுகளில் இருந்து உரம்

காய்கறிகளுக்கான உரம் இயற்கைக்கு உகந்ததாகவும், பயிரிடப்படும்காய்கறிகள்,பழங்களின்வளர்ச்சிக்குஊறு விளைவிக்காததாகவும், உள்ளூரில் கிடைக்கப்பதாகவும் இருக்க வேண்டும். மண்புழு உரம் அல்லது பால் பொருட்களிலிருந்தான உயிர்ம உரம் பயன்படுத்தலாம். கால்நடைகள் இல்லையென்றால், சமையலறைக் கழிவுகள் உரமிடுவதற்காகப் பயன்படுத்தலாம். அவை தோட்டத்தின் தாவரங்களில் ஊட்டச்சத்து வளமிக்க உயிர்ம உரம் இருப்பதை உறுதி செய்யும்.

தாவரங்களுக்கு நீர் விடுதல்

அதிகபட்ச விளைச்சலைப் பெறுவதற்கு தோட்டத்தில் தாவரங்களுக்கு வழக்கமாக நீர் விடுவது முக்கிய மாகும். தாவரங்களுக்கு நீர் விடும்போது, ஒவ்வொரு தாவரத்துக்குமான நீர் தேவை மாறுபடும் என்பதை முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டும். பீன்ஸ், பூசணிக்காய், கொத்துமல்லி போன்றவற்றிற்கு அதிக அளவும், கத்தரிக்காய், மிளகாய் போன்றவற்றிற்கு குறைந்த அளவும் நீர் தேவைப்படும். பூக்கும் போதும் காய்க்கும் போதும் பல காய்களுக்கு கூடுதல் நீர் தேவைப்படும். உதாரணமாக பீன்ஸ், பட்டாணி போன்றவைகளுக்கு பூக்கும் தருணத்தில் அதிகப்படியாக நீர் தேவைப்படும். தக்காளிகள் மற்றும் பூசணிக்காய் காய்க்கும் போது கூடுதல் நீரால் பயன்பெறும். பூக்கும் பருவத்திற்கு பிறகு வழக்கமாக நீரூற்றினால் பட்டாணி மற்றும் பீன்ஸ் கனமான காய்களை உண்டாக்கும். ஆரம்ப நிலையில் அதிகமாக நீரூற்றினால் கூடுதல் இலை வளர்ச்சியையும், குறைவான பூக்கள் மற்றும் காய்களை விளைவிக்கும். இலைக் கீரைகள் மற்றும் வேர் காய்களுக்கு வளர்ச்சிக் காலம் முழுவதும் வழக்கமாக நீரூற்ற வேண்டும்.

தாவரங்களுக்கு நீர் விடும்போது, ஒவ்வொரு தாவரத்துக்குமான நீர் தேவை மாறுபடும் என்பதை முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டும். இதனால் நீர் வீணாவதும் தவிர்க்கப்படும்.

நீரூற்றும் போது நினைவில் வைக்க வேண்டிய குறிப்புகள் வேர்ப்பகுதியில் கவனம் செலுத்தவும்

வேர்கள் தான் நீரை அணுக வேண்டும், இலைகள் அல்ல என்பதை நினைவில் வைக்கவும். இலைகளை ஈராமாக்குவது நீரை வீணாக்கும். நோய் பரவச் செய்யும். சிறிதளவு தண்ணீர் போன்றே அதிகப்படியான தண்ணீரும் பயிரினை பாதிக்கும். எனவே தேவைப்படும் போது மட்டும் நீரூற்றவும். காலை நேரத்தில் தாவரங்களுக்கு நீரூற்றுவது சிறந்த பலனைத் தரும்.

அனைத்திற்கும் கூளமிடவும்

கூளம் என்பது காய்ந்த இலைகள், சிறு கிளைகள் முதலியன போன்ற உயிர்மப் பொருட்கள் கொண்ட ஒரு படலம் மண் பரப்பில் பயன்படுத்தப்படுகிறது. அது மண்ணின் ஈரப்பதத்தைப் பராமரிக்க உதவுகிறது. கூளம் மண்ணின் வளத்தை மேம் படுத்துவதுடன், களைகள் வளர்வதையும் குறைக்கிறது.

கழுவும் நீரின் பயன்பாடு

குளிப்பதற்கும், துணிகள் துவைப்பதற்கும் பயன்படுத்தி வெளியேறும் கழிவு நீரை சப்போட்டா, கொய்யா, வாழை போன்ற பழ வகை மரங்களுக்கு பயன்படுத்தலாம். காய்கறிச் செடிகளுக்கு கழிவு நீரை பயன்படுத்துவதை தவிர்க்கலாம்.

வீட்டுத் தோட்டங்கள் அமைத்தபின் கூடுதலாக உள்ள கொல்லைப்புற இடத்தை கோழி வளர்ப்பதற்கும் பயன் படுத்தலாம். 8 முதல் 10 வரையிலான கோழிகளை வளர்ப்பது குடும்பத்தின் முட்டை மற்றும் இறைச்சித் தேவைக்கு போது மானது. இவ்வாறு கொல்லைப்புறத்தில் ஒரு தோட்டத்தை அமைப்பதால் ஆரோக்கியமான, ஊட்டச்சத்து மிக்க உணவுகளை பெறுவது உறுதி செய்யப்படுகிறது. ■

சர்வதேச மனநல நாள் விழிப்புணர்வு பேரணி

நாமக்கல் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் சார்பில் அக்டோபர் 10ஆம் தேதியன்று சர்வதேச மனநல நாள் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. நாமக்கல் நகரின் முக்கிய வீதிகள் வழியாக சென்ற இப்பேரணியில் நாமக்கல் அரசு மேல் நிலைப்பள்ளி மாணவ மாணவிகள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் உட்பட ஏராளமானவர்கள் இப்பேரணியில் கலந்து கொண்டனர்.

மனநலம் குறித்த விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்தவும், மனநோயால் பாதிக்கப்பட்டவர்களை நேசிக்கவும், மன நலம் பாதிக்கப்பட்டவர்களை ஆதரிக்கும் நோக்குடன் நடத்தப்பட்ட இப்பேரணியை நாமக்கல் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு பிலிப்ஸ் இளையராஜா தலைமையேற்று துவக்கி வைத்தார். உதவித் திட்ட மேலாளர் திரு ஜூலியஸ், வேளாண்மை வல்லுநர் திரு துரை ஆகியோர் பேரணியின் நோக்கம் பற்றி விளக்கிக் கூறினர். ■

இயற்கை முறையில் பயிரிடப்படும் பயிர்கள்

வேலூர் மாவட்டம், திருப்பத்தூரை அடுத்த ஜவ்வாது மலை புங்கம்பட்டு நாடு ஊராட்சி தகரகுப்பம் கிராமத்தில் உள்ள சிறுதானிய உற்பத்தி யாளர்கள் பூச்சரம் சார்பில், கடந்த 1 ஆண்டாக சாமை, திணை, மலைவாழை, கேழ்வரகு, நெல் மற்றும் சிறு தானிய வகைகள் ரசாயன உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகள் எதுவும் பயன்படுத்தாமல் இயற்கை முறையில் பயிர் செய்யப்பட்டு வருகின்றன. இதனைப் பாராட்டி இயற்கை வேளாண்மை இயக்கம் நற்சான்றிதழ் வழங்கியுள்ளது. மேலும் பூச்சர செயல்பாடுகளை உலக வங்கி குழுவில் இருந்து சீதாராமன், புதுவாழ்வு திட்ட மாநில இணை இயக்குநர் திருமதி சுஜாதா ஜேக்கப், வாழ்வாதார வல்லுனர் திரு பழனிவேல், நுண்நிதி வல்லுனர் திரு கருப்புசாமி ஆகியோர் ஆய்வு செய்தனர்.

பூச்சர உறுப்பினர்கள் 20 பேரிடம் ஆலோசனை நடத்திய அதிகாரிகள் அவர்களுக்கு பாராட்டு தெரிவித்தனர். அப்போது மாவட்ட திட்ட மேலாளர் திரு நாராயணன், உதவித் திட்ட மேலாளர்கள் மற்றும் மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் உடனிருந்தனர். ■

தகரகுப்பம் கிராமத்தில் உள்ள சிறுதானிய உற்பத்தியாளர்கள் பூச்சரம் சார்பில், கடந்த 1 ஆண்டாக சாமை, திணை, மலைவாழை, கேழ்வரகு, நெல் மற்றும் சிறு தானிய வகைகள் ரசாயன உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகள் எதுவும் பயன்படுத்தாமல் இயற்கை முறையில் பயிர் செய்யப்பட்டு வருகின்றன. இதனைப் பாராட்டி இயற்கை வேளாண்மை இயக்கம் நற்சான்றிதழ் வழங்கியுள்ளது.

உலக வங்கிக் குழுவினர் ஆய்வு

பெரம்பலூர் மாவட்டத்தில் புதுவாழ்வுத் திட்டத்தின் செயல்பாடுகளை பார்வையிடுவதற்காக 24.09.2013 அன்று வருகை புரிந்த உலக வங்கியின் பிரதிநிதிகளான திரு சமிக்தாஸ் மற்றும் திருமதி. ஸ்ருதி கௌர் ஆகியோர், ஆலத்தூர் ஒன்றியம் கொளக்காநத்தம் மற்றும் வேப்பந்தட்டை ஒன்றியம் நெய்குப்பை ஆகிய கிராமங்களில் செயல்படும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களைப் பார்வையிட்டு, அவைகளின் செயல்பாடுகளை ஆய்வு செய்தனர். இப்பகுதியில் உள்ள மறுசீரமைக்கப்பட்ட கூட்டமைப்பு, இலக்கு மக்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட பால் உற்பத்தி யாளர் ஒத்த தொழில் குழு, சமூக தணிக்கைக் குழு மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் செய்தனர். பின்னர் இக்குழுவினர் மாவட்ட ஆட்சித்லைவர் டாக்டர் தரேஸ் அஹமது, இ.ஆ.ப., அவர்களை நேரில் சந்தித்து, புதுவாழ்வு திட்டத்தின் செயல்பழடுகள் குறித்தும், பிற துறைகளுடன் இணைந்து மேற்கொண்டு வரும் பணிகள் குறித்தும் ஆலோசனை மேற்கொண்டனர். இந்நிகழ்வுகளின் போது மாவட்ட திட்ட மேலாளர் திருமதி சுதாதேவி, மாநில வல்லுனர்கள் திரு தாரகம், திரு பிரேம்குமார் ஆகியோர் உடன் இருந்தனர். ■

நான் விவாவில் உறுப்பினர் ஆகி ஆறு ஆண்டுகள் ஆகின்றன. பகுதி நேர வேலை பார்த்துக் கொண்டே ஜோதிடத்தையும் ஒரு தொழிலாக செய்து கொண்டிருந்தேன். ஆனால் இவற்றில் இருந்து வந்த வருமானம் எனக்கு போதுமானதாக இல்லை. தொடர்ந்து விவாவின் கூட்டங்களில் கலந்து கொள்வேன்.

தமிழ்நாடு மகளிர் தொழில் முனைவோர் நலச் சங்கம் (Women Enterpreneurs Welfare Association of Tamil-nadu) தொழில் முனைவு மற்றும் நிர்வாகம் தொடர்பான விழிப்புணர்வை பரவலாக ஏற்படுத்தி வருகிறது. இந்த அமைப்பின் துணைச் செயலாளராக பொறுப்பு வகிப்பவர் திருமதி வீ. வேதவல்லி. ‘விவா’ என்று சுருக்க மாக அழைக்கப்படும் இந்த அமைப்புடன் தனக்கு உள்ள தொடர்பு மற்றும் பயன்கள் குறித்த தன் அனுபவங்களையும் தன்னுடைய வெற்றியையும் முற்றம் வாசர்களுடன் திருமதி வேதவல்லி பகிர்ந்து கொள்கிறார்.

உறுதியாக இருப்போம். பரிமாறும் போதும் கனிவுடன் பரிமாறுவோம். இயல்பிலேயே பெண்களுக்கு இருக்கும் விருந்தோம்பல் தன்மை எங்கள் தொழிலின் வளர்ச்சிக்கு கை கொடுத்தது.

ஒருமுறை எங்களை தங்கள் வீட்டு விழாக்களுக்கு விருந்து தயாரிக்க அழைப்பவர்கள், தங்கள் உறவினர்கள், நண்பர்கள் வீட்டு விழாக்களுக்கும் பரிந்துரைக்கிறார்கள். அந்த வகையில் எங்கள் தொழில் படிப்படியாக வளர்ந்து வருகிறது. தொடர்ந்து எங்கள் கேட்டரிங் தொழில் திறமையும் வளர்ந்து வருகிறது.

சமையல் தொழிலில் சாதனை படைக்கும் பெண்மணி

சமையல் தொழிலில் ஈடுபடுவதற்கு முன்னர் நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?

நான் விவாவில் உறுப்பினர் ஆகி ஆறு ஆண்டுகள் ஆகின்றன. பகுதி நேர வேலை பார்த்துக் கொண்டே ஜோதிடத்தையும் ஒரு தொழிலாக செய்து கொண்டிருந்தேன். ஆனால் இவற்றில் இருந்து வந்த வருமானம் எனக்கு போதுமானதாக இல்லை என்ற மனக்குறை எனக்கு இருந்தது.

சமையல் தொழிலில் உங்களுக்கு ஈடுபாடு ஏற்பட்டது எப்படி?

விவாவின் கூட்டங்களில் கலந்து கொள்வதால் பலருடைய நட்பு கிடைத்ததோடு, ஏராளமான வல்லுநர்களின் தொழில் வளர்ச்சி சார்ந்த உரைகளையும் கேட்கும் வாய்ப்பு கிடைத்தது. இதன் பயனாக சமையல் தொழிலை மேற் கொண்டால் என்ன என்ற எண்ணம் தோன்றியது. உடனே அது தொடர்பான தகவல்களைத் திரட்டினேன். தேவையான தகவல்களைத் திரட்டிய பின்னர் சமையல் தொழிலில் ஈடுபட்டேன்.

சமையல் தொழிலில் நீங்கள் வெற்றிகரமாக திகழ்வதற்கு காரணம்...

சமையல் தொழிலைப் பொறுத்த வரை சுவையும், தூய்மையும் முக்கியம். இவற்றில் நாங்கள் எப்போதும்

தொழில் முனைவோராக இருக்கும் மகளிருக்கும், தொழில் முனைவோர் ஆக விரும்பும் மகளிருக்கும் விவாவின் வழிகாட்டல்கள் தரும் பயன்கள் மிகவும் நன்மை தருவதாக இருப்பதை எண்ணி பெருமிதம் அடைகிறேன்

‘விவா’ குறித்து உங்கள் கருத்து...

விவா அமைப்பைப் பொறுத்த வரை, இதனை வழிநடத்திச் செல்லும் இதன் தலைவர் திருமதி. கிருஷ்ணா இராதாகிருஷ்ணன் அவர்களின் அயராத உழைப்பும், தளராத தன்னம்பிக்கையுடன் செயல்படும் பாங்கும் என்னைக் கவர்ந்தவை ஆகும். மேலும் எங்கள் அமைப்பின் உறுப்பினர்களுக்கு ஏதேனும் சிக்கல்கள் ஏற்படும் போது அவற்றை நேர்த்தியுடன் அலசி ஆராய்ந்து அவர் தரும் தீர்வுகள் துல்லியமாகவும், சிறப்பாகவும் இருக்கும். இதன் காரணமாக விவாவின் செயல்பாடுகள் பல்வேறு தரப்பினராலும் பாராட்டப்படுகின்றன.

தொழில் முனைவோராக இருக்கும் மகளிருக்கும், தொழில் முனைவோர் ஆக விரும்பும் மகளிருக்கும் விவாவின் வழிகாட்டல்கள் தரும் பயன்கள் கருதி பெருமிதம் அடைகிறேன் என்கிறார் திருமதி வேதவல்லி. ■

Published by S.CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From TNCDW, Annai Teresa Mahalir Valagam, 1st Floor, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai – 600 034 (75,600 Copies circulated) an Printed by C. JEBAMANI, CANAAN PRESS PRIVATE LTD., No. 62/1, Peter's Road, Royapettah, Chennai - 600 014. Editor: S.CHINNAPPAN.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 498 / 2012
Reg. No. TN/CH(C)/455/12-14 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP - 564 / 2012 - 14
Date of Publication 21.10.2013

திறந்தவெளியில் மலம் கழிப்பதால், கொக்கிப் புழு, உருண்டைப்புழுக்களின் முட்டைகள் நிலமெங்கும், மண் முழுவதும் பரவுகின்றன. கண்ணுக்குத் தெரியாத முட்டைகளால் உங்கள் ஆரோக்கியத்திற்கு கேடு விளையும். எச்சரிக்கையாய் இருங்கள். வீட்டில் கழிவறை கட்டுங்கள். அது வரை பொதுக் கழிவறைகளை பயன்படுத்துவேன் என சபதமெடுங்கள். ஏனெனில்

கழிவறை உபயோகமே, வாழ்க்கைக்கு ஆரோக்கியம்.

unicef
unite for children

வெளியில மலம் போனா சீச்சீ சொல்லப்பா!

ஆலமரமாய்...

இன்று 2013ல்

சுய உதவிக் குழு உறுப்பினர்களிடையே தன்னம்பிக்கையும், பேச்சுத் திறனும் மேம்பாடு அடைந்துள்ளது.

அரசின் நலத்திட்டங்களில் ஏழை மகளிரிடையே பங்கேற்பும், அவற்றை பற்றிய விழிப்புணர்வும் உயர்ந்துள்ளது.

பல்வேறு வகையான பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொண்டதால், அவர்களின் பொருளாதாரம் உயர்ந்துள்ளது.

சாதி, சமய தடைகளை தகர்த்தெறிந்து மகளிர் ஒன்றுபட்டுள்ளனர்.

கிராம சபை மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் மகளிரின் பங்கேற்பும் உயர்ந்துள்ளது.

வங்கிகளின் பார்வையில் சுய உதவிக் குழுக்களின் நம்பகத்தன்மை உயர்ந்துள்ளதால், சுலபமாக வங்கிகளிடமிருந்து கடன் பெறும் நிலை அதிகரித்துள்ளது.

அதிக அளவில் கந்து வட்டி முறை ஒழிக்கப்பட்டுள்ளது.

தலைமை அலுவலகம் :
254-260, அவ்வை சண்முகம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை 600 014.
மின்னஞ்சல் : **indmail@indianbank.co.in**
இணையதளம் : www.indianbank.in,
Toll Free No: 1800 425 00 000

இந்தியன் வங்கி
इंडियन बैंक
Indian Bank
आपका प्रौद्योगिकी हितैषी बैंक
Your Tech-Friendly Bank